

















இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியம்

# பாதுகாப்பாக வெளிநாட்டுத் தொழிலில் ஈடுபடுவதற்கான தகவல் கோவை

## களஉத்தியோகத்தர்களுக்காக தயாரிக்கப்பட்ட கருவியாகும்







# பாதுகாப்பாக வெளிநாட்டுத் தொழிலில் ஈடுபடுவதற்கான தகவல் கோவை

இத்தகவல் கோவையைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்ப உதவி
சர்வதேச தொழிலாளர் அமைப்பின் இலங்கைக்கும்
மாலைதீவுக்குமான அலுவலகம் பெற்றுத்தந்தது
2013 நவம்பர்

# உள்ளடக்கம்


பாதுகாப்பாக வெளிநாட்டுத் தொழிலில் ஈடுபடுவதற்கான தகவல் கோவை பற்றிய அறிமுகம் 01

1. புறப்படுவதற்கு முன்னர் 05

1.1 தீர்மானம் மேற்கொள்வதற்கு முன்னரான கரிசனைகள் 05

1.2 தீர்மானம் மேற்கொள்ளுதல் 06

1.3 தொழிலினை தெரிவுசெய்தல் 07

1.4 ஆட்சேர்ப்பு நடைமுறைகள் 08

1.5 புறப்படுவதற்கு முன்னரான ஆயத்தங்கள் 11

1.6 புறப்படுவதற்கு முன்னரான சுய ஆயத்தங்கள்/சுய மதிப்பீடு மற்றும் புறப்படுதலுக்கான சரிபார்த்தல் பட்டியல் 22

2. புறப்படுதல 27

2.1 விமான நிலையத்திற்கு பயணித்தல் 27

2.2 விமான நிலையத்தில் 27

2.3 விமானத்தில் 29

3. சென்றடைதலும் தொழிலில் ஈடுபடுதலும் 31

3.1 குறிப்பிட்ட நாட்டை சென்றடைதல் 31

3.2 தொழிலில் ஈடுபடுதல் 32

3.3 பல்வேறு காரணங்களினால் திரும்பிவருதல் 37

3.4 ஒப்பந்தக் காலம் முடிவடைதல் 37

3.4.1 தங்கியிருக்கும் காலத்தை நீடித்தல் 39

4. மீளத் திரும்புதலும் சமூக ஒருங்கிணைவும் 41

4.1 நாடு திரும்புதலும் ஒருங்கிணைவும் 41

4.2 குறுங்கால ஒருங்கிணைவும் மீளப் புலம்பெயர்தலும் 43

4.3 நீண்டகால ஒருங்கிணைவு 44

கையேடுகளின் பட்டியல்.


கையேடு 1 - மருத்துவ பரிசோதனை செயன்முறை பற்றிய முக்கியமான தகவல்கள்

கையேடு 2 - தொழில் முகவர் நிலையமொன்றைப் பற்றிய மேலதிக தகவல்களைப் பெறுவது எப்படி?

கையேடு 3 - எனது தொழில் ஒப்பந்தத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது?

கையேடு 4 - குறிப்பிட்ட சில நாடுகளில் ஆகக்குறைந்த சம்பளமும் நிபந்தனைகளும்

கையேடு 5 - இலங்கை தூதரங்களின் தொழிலாளர் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

கையேடு 6 - புறப்படுவதற்கு முன்னரான சரிபார்த்தல் பட்டியல்

கையேடு 7 - உங்களுடைய பணத்தை கையாளுதல்

கையேடு 8 - இரண்டு சர்வதேச விமானநிலையங்களிலுள்ள சஹன பியச நிலையங்களினால் வழங்கப்படும் சேவைகள்

கையேடு 9 - ரட்டவிருவோ நிகழ்ச்சித்திட்டம் என்றால் என்ன?


பின்னிணைப்புகளின் பட்டியல்


பின்னிணைப்பு 1 - கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வது எப்படி?

பின்னிணைப்பு 2 - புறப்படுவதற்கு முன்னரான பயிற்சி பற்றிய விபரங்கள்

பின்னிணைப்பு 3 - பயிற்சி நிலையங்களின் முகவரிகளும் தொடர்பு விபங்களும்

பின்னிணைப்பு 4 - தற்போது பாவனையிலுள்ள மாதிரி ஒப்பந்தம்

பின்னிணைப்பு 5 - தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளும் நாடுகளிலுள்ள இலங்கை தூதுச் சேவை அலுவலகங்

# முகவுரை

பாதுகாப்பான புலம்பெயர்வுக்கான தகவல் பொதி எனும் இக்கைநூல் ‘‘நல்லாட்சி, பாதுகாப்பு மற்றும் வலுவூட்டல் ஊடாக புலம்பெயர் உழைப்பாளிகளின் தொழிலுக்குரிய கண்ணியத்தை மேம்படுத்துதல்’’ எனும் திட்டத்தின் முதலாம் படிமுறையை நடைமுறைப்படுத்தும் போது கிடைக்கப்பெற்ற பின்னூட்டல்களை அடிப்படையாகக் கொண்டு விருத்தியாக்கப்பட்டுள்ளதுடன் இது இலங்கையின் புலம்பெயர் உழைப்பாளிகள் பற்றிய கொள்கையை விளைத்திறன்வாய்ந்ததாக அமுல்படுத்தப்படுவதை உறுதிசெய்வதாக அமைகின்றது. புலம்பெயர்ந்து உழைத்தல் பற்றிய விடயத்தின் பல்வேறு பரிமாணங்களை சரியான வகையில் பல்வேறு ஆட்சி மட்டத்தில் பெற்றுத்தருதல் தேவையானதாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்த இலக்கினை அடைந்து கொள்ளும் பொருட்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தனது சேவைகளை மாவட்ட மட்டத்தில் பரவலாக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பினும், புலம்பெயர்ந்து உழைத்தலின் போது புலம்பெயர் உழைப்பாளிகளும் அவர்களது குடும்பமும் முகம்கொடுக்கின்றதான பல்வேறு இடர்களை இயன்றளவு குறைக்கும் முகமாக பிரதேச செயலக மடத்திலும் கிராமிய மட்டத்திலும் புலம்பெயரும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பாதுகாப்பாக புலம்பெயர்வதற்கு உதவியளிக்கும் வகையில் தகவல் கிடைக்கப்பெறுவதை உறுதிசெய்யும் தேவை இப்பொழுதும் நிலவுகின்றது.

ஆகவே, இந்த உழைப்பாளிகளின் பாதுகாப்பான புலம்பெயர்வுக்கான தகவல் பொதி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் முனைப்பான ஈடுபாடு மற்றும் தொழில், தொழில் உறவு அமைச்சின் உத்தியோகத்தர்கள், சிவில் சமூக அமைப்புகள், தொழிற் சங்கங்கள், இலங்கை தொழிலாளர் சம்மேளனம், மற்றும் நன்கொடையாளராகிய சுவிஸ் அபிவிருத்தி நிருவகம் ஆகியவற்றின் பெறுமதிமிக்க உளள் ீடுகளுடன் கூடிய கலந்துரையாடல் செயன்முறையின் மூலமாகவே விருத்தியாக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான முறையில் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்காக செல்லுதல் மற்றும் பயணம் செல்லுதல் பற்றிய இந்த இறுதி வழிகாட்டலை விருத்தியாக்கும் பணியில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) பிராந்திய ரீதியிலான அனுபவங்களும் கவனத்திற் கொள்ளப்பட்டன.

இந்த கைநூல் மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டத்திலுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமன்றி இலங்கை புலம்பெயர் உழைப்பாளிகளின் பாதுகாப்பு மற்றும் வலுவூட்டல் சம்பந்தமாக பணியாற்றும் அனைத்து பங்கீடுபாட்டாளர்களுக்கும் தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வளமாக அமைகின்றது.

இந்த புத்தகம் மிக ஆற்றல் வாய்ந்தாக இருப்பினும் இதனை பயன்படுத்துவர்களுக்கு ஏற்புடையதாகவும் நடப்பு நிலவரங்களை எடுத்தியம்புவதாகவும் அமையும் பொருட்டு இதனை கிரமமான முறையில் இற்றைப்படுத்துதல் அத்தியாவசியமானதாகும்.

# பாதுகாப்பாக வெளிநாட்டுத் தொழிலில் ஈடுபடுவதற்கான தகவல் கோவை பற்றிய அறிமுகம்

இந்த வழிகாட்டல் வெளியீடு மனைசார் தொழில்துறை (வீட்டுப்பணி) (மனைப் பராமரிப்பு உதவியாளர்கள், தோட்டப் பணியாளர்கள், சாரதிகள் போன்ற) மற்றும் தொழிற்சாலை பணியாளர்கள், தொழிலாளர்கள் போன்ற தேர்ச்சி குறைந்த பணியாளர்கள் எனக் கருதப்படும் பணியாளர் வகையினரை பிரதான நோக்காகக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆயினும், இந்த தகவல் பொதியில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் வெளிநாட்டு வேலைவாய்பினை நாடிச்செல்லும் அனைத்து தேர்ச்சி பெற்ற பிரிவைச் சார்ந்த உழைப்பாளிகளுக்கும் பொதுவாக பயனுடையதாகவே அமைகின்றது.

இந்த தகவல் வழிகாட்டியை தயாரிப்பதன் பிரதான நோக்கம் யாதெனில் பிரதேச மற்றும் உள்ளூர் மட்டத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை நாடுகின்றவர்கள், ஏற்கனவே புலம்பெயர் உழைப்பாளிகளாக இருப்பவர்கள், பணியாற்றிய பின்னர் நாடு திரும்புபவர்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் ஆகியோருக்கு சரியான தகவல்களை பெற்றுக்கொடுப்பதற்கு வழிகாட்டும் வகையில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரகளுக்கு தேவையான தகவல்களை பெற்றுக்கொடுப்பதாகும்.

## உழைப்பாளிகளின் புலம்பெயர்வு செயன்முறையுடன் தொடர்புடைய நான்கு பிரதான கூறுகள் உள்ளன.

1. புறப்படுவதற்கு முன்னர்
2. புறப்படுதல்
3. பணியாற்றுதல் அல்லது தொழிலில் ஈடுபடுதல்
4. நாடு திரும்புதல்

## ஒவ்வொரு பிரதான பகுதிக்கும் கீழ் துணை விடயப்பரப்புகளும் உள்ளன.

1. புறப்படுவதற்கு முன்னர்
    - 1.1 தீர்மானம் மேற்கொள்வதற்கு முன்னரான கரிசனைகள்
    - 1.2 தீர்மானம் மேற்கொள்ளுதல்
    - 1.3 தொழிலை தெரிவுசெய்தல்
    - 1.4 ஆட்சேர்பு நடைமுறைகள்
    - 1.5 புறப்படுவதற்கு முன்னரான ஆயத்தங்கள்

1.6 புறப்படுவதற்கு முன்னரான சுய ஆயத்தங்கள்.∴சுய மதிப்பீடு மற்றும் புறப்படுதலுக்கான சரிபார்த்தல் பட்டியல்.

2. புறப்படுதல்

2.1 விமான நிலையத்திற்கு பயணித்தல்

2.2 விமான நிலையத்தில்

2.3 விமானத்தில்

3. சென்றடைதலும் தொழிலில் ஈடுபடுதலும்

3.1 குறிப்பிட்ட நாட்டை சென்றடைதல்

3.2 தொழிலில் ஈடுபடுதல்

3.3 பல்வேறு காரணங்கள் நிமித்தமாக தாய் நாட்டிற்கு திரும்பி வருதல்

3.4 ஒப்பந்தக் காலம் முடிவடைதல்

3.4.1 தங்கியிருக்கும் காலத்தை நீடித்தல

4. மீளத்திரும்புதலும் ஒருங்கிணைதலும்

4.1 நாடு திரும்புதலும் ஒருங்கிணைதலும்

4.2 குறுங்கால ஒருங்கிணைதலும் மீளப் புலம்பெயர்தலும்

4.3 நீண்டகால ஒருங்கிணைதல்

## பாதுகாப்பாக வெளிநாட்டுத் தொழிலில் ஈடுபடுவதற்கான தகவல் கோவையின் படிமுறைகள்.

1. புறப்படுவதற்கு முன்னர்
   - 1.1 தீர்மானம் மேற்கொள்வதற்கு முன்னரான கரிசனைகள்
   - 1.2 தீர்மானம் மேற்கொள்ளுதல்
   - 1.3 தொழிலை தெரிவுசெய்தல்
   - 1.4 ஆட்சேர்பு நடைமுறைகள்
   - 1.5 புறப்படுவதற்கு முன்னரான ஆயத்தங்கள்
   - 1.6 புறப்படுவதற்கு முன்னரான சுய ஆயத்தங்கள்/சுய மதிப்பீடு மற்றும் புறப்படுதலுக்கான சரிபார்த்தல் பட்டியல்

**பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்லல்**

2. புறப்படுதல்
   - 2.1 விமான நிலையத்திற்கு பயணித்தல்
   - 2.2 விமான நிலையத்தில்
   - 2.3 விமானத்தில்

3. சென்றடைதலும் தொழிலில் ஈடுபடுதலும்
   - 3.1 குறிப்பிட்ட நாட்டை சென்றடைதல்
   - 3.2 தொழிலில் ஈடுபடுதல்
   - 3.3 பல்வேறு காரணங்களினால் திரும்பிவருதல்
   - 3.4 ஒப்பந்தக் காலம் முடிவடைதல்

4. மீளத்திரும்புதலும் ஒருங்கிணைதலும்
   - 4.1 நாடு திரும்புதலும் ஒருங்கிணைதலும்
   - 4.2 குறுங்கால ஒருங்கிணைதலும் மீளப் புலம்பெயர்தலும்
   - 4.3 நீண்டகால ஒருங்கிணைதல்

# பிரிவு 1 புறப்படுவதற்கு முன்னர்

## 1.1 தீர்மானம் மேற்கொள்வதற்கு முன்னரான கரிசனைகள்.

அ தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைக்கு முன்னர் பரிசீலனைக்கு உட்படுத்தவேண்டிய முக்கியமான விடயங்கள்.

I. வெளிநாட்டு வேலைவாய்ப்பை நான் தேடுவதற்கான காரணத்தை பற்றி தெளிவாக புரிந்துகொண்டுள்ளேனா?

II. நான் வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடுவதின் நோக்கத்தை பற்றி எனது குடும்பம் புரிந்துணர்வு கொண்டுள்ளதா?

III. நாட்டுக்குள்ளேயே தொழில் வாய்ப்பொன்றை தேடிக்கொள்வதற்காக அனைத்து வழிவகைகளையும் நான் முயற்சிசெய்துள்ளேனா?

IV. எனக்கு 2 ஆண்டு காலம் எனது குடும்பத்தை பிரிந்து வாழ முடியுமா?

V. எனது பராமரிப்பை நாடுகின்ற கைக்குழந்தைகள் அல்லது 5 வயதுக்கு குறைந்த பிள்ளைகள் இருக்கின்றார்களா?

VI. நான் இல்லாத காலத்தில் அவர்களை பராமரித்துக்கொள்வது யார்?

VII. என்னை பிரிந்து எனது குடும்ப அங்கத்தவர்களுக்கு இரண்டு ஆண்டு காலம் சமாளித்துக்கொள்வார்களா?

VIII. எனது உதவியின்றி எனது குடும்ப அங்கத்தவர்கள் அவர்களது அன்றாட செயற்பாடுகளை எனது உதவியின்றி சமாளித்துக்கொள்வார்களா?

IX. எனது குடும்ப அங்கத்தவர்கள் எனது உதவியின்றி நிதி நடவடிக்கைகளை நிர்வகித்துக்கொள்வார்களா?

X. எனது பிள்ளைகள் (5 வயதுக்கும் மேற்பட்ட) எனது உதவியின்றி அவர்களது பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை இடையறாது மேற்கொள்வார்களா?

XI. நான் இங்கு இல்லாவிட்டாலும் எனது பிள்ளைகளின் பாதுகாப்பு, போசாக்கு மற்றும் சுகாதாரம் ஆகியவைக்கு எந்த குந்தகமும் ஏற்படாமல் உறுதியாக இருக்குமா?

XII. எனது குடும்பத்தைச் சேர்ந்த நெருங்கிய உறவினர்களிடமிருந்தும் ஏனையவர்களிமிருந்தும் எனக்குத் தேவையான ஒத்தாசை கிட்டுமா?

XIII. வயோதிப குடும்ப அங்கத்தவர்கள் எனது உதவியின்றி சமாளித்துக்கொள்வார்களா? இல்லாவிடின் அவர்களுடைய பராமரிப்புக்கு உள்ள மாற்று நடவடிக்கைகள் யாவை?

ஆ. வேலைவாய்ப்பிற்காக புலம்பெயர்தல் சம்பந்தமாக தீர்மானம் மேற்கொள்வதற்கு முன்னர் நான் யாருடன் கலந்துரையாட வேண்டும் அல்லது கலந்தாலோசனை செய்ய வேண்டும்?

I. **வாழ்கைத் துணை:** கணவன் அல்லது மனைவி, பிள்ளைகள், பெற்றோர்கள்/வயதுமுதிர்ந்தவர்கள், கூட்டுக்குடும்ப அங்கத்தவர்கள், சகோதரிகள், சகோதரர்கள் மற்றும் அயலவர்கள் போன்றவர்கள்: அவர்களுடைய கரிசனைகள் பற்றி கலந்துரையாடுவதற்கும் அவர்களின் ஆலோசனைகளையும் ஒத்தாசையையும் பெற்றுக்கொள்வதற்காக

II. **சேவை வழங்குனர்கள்:** இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியத்தின் (SLBFE) அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், பிள்ளைகளின் பாடசாலைகளின் அதிபர்கள், மத மற்றும் ஆண்மீகத் தலைவர்கள்:- இவர்களினால் வழங்கப்படுகின்ற பல்வேறு விதமான சேவைகளை அறிந்துகொள்வதற்காகவும் தான் நாட்டில் இல்லாத போது தனது குடும்பத்திற்கு தேவையான உதவிகளை பெற்றுக்கொள்வதற்காகவும்,

III. **மருத்துவர்கள்:** தொழிலுக்கு தேவையான உடல் மற்றும் உள ரீதியான திடநிலையை அறிந்துகொள்வதற்காக.

IV. **இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்** (SLBFE):- கிடைக்கக்கூடிய தொழில் வாய்ப்புகள், ஆட்சேர்ப்பு நடைமுறை, புறப்படுவதற்கு முன்னரான ஆயத்தங்கள், புறப்படுவதற்கு முன்னரான பயிற்சி ஆகியவை சம்பந்தமாக வழங்கப்படும் சேவைகள், ஒருங்கிணைவு பற்றிய வழிகாட்டல்கள் போன்றவற்றை பெறுவதற்காக

V. நான் எதிர்பார்க்கும் தொழிலை செய்வதற்கு எனக்கு ஆற்றலும் தேவையான திறனும் தகுதியும் இருக்கின்றதா?

இ. நான் வெளிநாட்டு வேலையொன்றை நாடுவதற்கு தகுதியுடையவனா / தகுதியுடையவளா?

| |
|---|
| பயன்படுத்தக்கூடிய கருவிகள்: "பிப்பென கெக்குழு" (மலரும் மொட்டுக்கள்)- (புலம்பெயர் உழைப்பாளிகளின் பிள்ளைகளுக்கான பாதுகாப்பு பற்றிய வீடியோ) |

## 1.2 தீர்மானம் மேற்கொள்ளுதல்.

I. வெளிநாட்டிற்கு செல்லவேண்டுமென நான் சொந்தமாக முடிவெடுத்தல்.

➢ **சாதகமான விடயங்கள்:** ஒரு கஷ்டமான குடும்ப சூழலிருந்து வெளியேறுவதற்கான வாய்ப்பு கிடைத்தல், எனது சம்பாதிக்கும்

ஆற்றல் அதிகரித்தல் மற்றும் குடும்பத்திற்கு பண உதவி செய்யக்கூடிய வாய்ப்பு கிட்டுதல்

- ➢ **பாதகமான விடயங்கள்:** குழந்தை பராமரிப்பு, வீட்டு வேலைகள் மற்றும் நிதி நிர்வாகம் போன்ற விடயங்களுக்கு எனது கணவன் மற்றும் பெற்றோரின் உதவி கிடைக்காமல் போகும்.

II. வெளிநாட்டு வேலைவாய்ப்பு சம்பந்தமாக எமக்கு மிகவும் நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுடன் கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்ளும் போது அது எமக்கு உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் ஒரு உந்து சக்தியையும் பலத்தையும் தருவதால் தீர்மானம் மேற்கொள்வதற்கு உதவியளிக்கின்றது.

III. கூட்டு குடும்பத்தை சேர்ந்த அங்கத்தவர்களின் உதவியும் தேவையாக இருப்பதால் அவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் தீர்மானம் மேற்கொள்வதே சிறந்ததாகும்.

IV. பணத்தை கையாளுவது யார் என்பதையும் அது எவ்வாறு நிர்வகிக்கப்படும் என்பதையும் உங்களுடைய இலக்கினை அடைந்துகொள்வதற்கு எவ்வளவு பணத்தை நீங்கள் சேமிப்பீர்கள் என்பதையும் பற்றியும் உங்கள் குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து தீர்மானியுங்கள்.

V. புலம்பெயர்ந்து தொழில் செய்வதின் நோக்கம் மிகவும் தெளிவாக நிரூபிக்கப்படல் வேண்டும். (சொத்து ஒன்றை வாங்குவதற்கு, பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு, வாழ்வாதாரத்திற்கு தேவையான ஆரம்பநிலை மூலதனத்தை உருவாக்கிக்கொள்வதற்கு)

VI. குடும்பத்துடனும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் சேவை வழங்குனர்களுடனும் கலந்துரையாடிய பின்னர் தெளிவான மீள்ஒருங்கிணைவு திட்டமொன்றை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

VII. நாடு திரும்பியவர்களை சந்தித்து அவர்களின் அனுபவங்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்காக கலந்தாலோசனை செய்தல்.

## 1.3 தொழில் தெரிவு.

I. சம்பந்தப்பட்ட நாடுகளிள் எவ்வகையான தொழில் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைப் பற்றிய தகவல்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளுதல்.

II. குறிப்பட்டதொரு தொழில் வகையை செய்வதற்காக கொண்டுள்ள விருப்பம் தகுதி மற்றும் திறனின் அடிப்படையில் தொழிலை தெரிவுசெய்துகொள்ளுதல்.

III. தனக்கு அனுபவமுள்ள தொழில் வாய்ப்பு இருக்குமாயின் அதனையே தெரிவு செய்துகொள்ளுதல்

IV. மருத்துவ சான்றளிப்பு அடிப்படையில் மருத்துவ ரிதியிலான தகுதி

மருத்துவ பரிசோதனை செயன்முறை பற்றிய கையேடு 1ஐ பார்க்கவும்

## 1.4 ஆட்சேர்ப்பு நடைமுறைகள்

மாதிரி அனுமதிப்பத்திரம்



நீங்கள் வெளிநாட்டில் வேலைசெய்வதற்கு தீர்மானித்த பின்னர் பின்பற்றவேண்டிய செயன்முறைகள்.

**அ. வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பற்றி தகவல் அறிந்துகொள்வது எப்படி?**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தகவல் கருமபீடத்தின் ஊடாக,

I. அனுமதிப்பத்திரம் கொண்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தின் ஊடாக (அல் லது அவர்களின் ஊக்குவிப்பாளர்கள்ஃ அனுமதிப்பத்திரமுடைய முகவர்களின் உறுதிசெய்தலுடன் கிராம மட்டத்திலுள்ள அவர்களின் பிரதிநிதிகள்)

II. அரசாங்கங்கங்களுக்கிடையிலான (ஒரு அரசாங்கம் இன்னுமொரு அரசாங்கத்துடன்) தொழில் வழங்கும் ஏற்பாடுகள். தகவல்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் துரித தொலைபேசி அழைப்பு சேவையூடாகவும் மாவட்ட நிலையங்கள் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

III. வெளிநாட்டு தொழில்தருநர் ஒருவரின் மூலமாக நேரடியாக தகவல்களை பெறுதல் அல்லது குடும்பத்தின்/நண்பர்களின் பரிந்துரை மூலமாக

IV. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மாகாண மற்றும் மாவட்ட நிலையங்கள்

V. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இணையத்தளம் (றறற. ளடடிகந.டம)

VI. வெளிநாடடு வேலைவாய்ப்பு பணியகத்தின் தகவல் வழங்கும் நேரடி தொலைபேசி சேவைகள் ( 24 மணித்தியால சேவை: +94 11 2879900 – 902)

VII. அரசாங்க தகவல் தொலைபேசி சேவைகள் ((1919)ழச றநடிளவைந (http://www.gic.gov.lk/)

## ஆ. ஒரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தின் ஊடாக நீங்கள் எப்படி தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

I. பத்திரிகை/வானொலி மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்கள்

II. உள்ளூர் இடைத்தரகர்கள்- வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பாளர்கள்ஃபிரதிநிதிகள்.

III. புலம்பெயர் மற்றும் ஆட்சேர்ப்பு செயன்முறையில் செலுத்தப்படும் எந்தவொரு கொடுப்பனவுக்கும் பற்றுச்சிட்டை (ரசீது) கோரவும் அதனை பத்திரமாக வைத்துக்கொள்ளவும் ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

## இ. ஆட்சேர்ப்பு முகவர் நிலையத்தை மெய்யுறதி செய்துகொள்ளுதல்.

I. முகவரின் அனுமதிப்பத்திர இலக்கம் என்ன?

II. அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடி காலம் என்ன?

III. நீங்கள் தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆட்சேர்ப்பு முகவர் நிலையம் உங்களுக்கு ஒரு கடனை வழங்குமாயின் நீங்கள் அதனை எப்படி மீளச் செலுத்தப் போகின்றீர்கள் என்பதை பற்றி பரிசீலித்துப் பாருங்கள். நீங்கள் தொழில் தருநருக்கோ அல்லது ஆட்சேர்ப்பு முகவர் நிலையத்திற்கோ கடன் பட்டு விட்டால் அதனை மீளச் செலுத்தி முடிக்கும் வரை உங்களை நிச்சயமாக வேலையில் ஈடுபடுத்துவார்கள். ஆகவே, பெருந்தொகை பணத்தை கடன் வாங்குதல் உங்களை இவ்வாறான இடர் நிலைக்கு உள்ளாக்கிவிடக்கூடும்.

> உங்களை ஆட்சேர்ப்பு செய்பவரோ அல்லது உங்கள் தொழில் தருநரோ ஒப்பந்தமொன்று இல்லாமல் உங்கள் வயதை அல்லது வேலையை மாற்றுமாறு கூறுவார்களாயின் இவர்கள் உங்களை சட்டரீதியான முறையில் தொழிலுக்கு அமர்த்தமாட்டார்கள் என்பதற்கும் உங்களை தங்களது நன்மைக்காக பயன்படுத்து முயற்சி செய்கின்றார்கள் என்பதற்கும் இது அறிகுறியாகும்.

## ஈ. குறிப்பிட்ட சில தொழில்வாய்ப்புக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான செலவுகள்

வளைகுடா நாடுகளுக்கு மனைசார் பணியாளர்கள் புலம்பெயர்வதற்கான செலவுகள்.

| செலவு | செலவை பொறுப்பேற்பது யார் |
|---|---|
| முகவர் நிலையம்/இடைத்தரகர் சேவைகள் | அவ்வாறான செலவுகள் இல்லை |
| கடவுச்சீட்டை தயார் செய்துகொள்ளல் | முகவர் நிலையம் |
| வீசாக் கட்டணம் | முகவர் நிலையம் |
| மருத்துவ பரிசோதனைகளுக்கான செலவுகள் | முகவர் நிலையம் |
| விமானச்சீட்டு | முகவர் நிலையம் |
| பணியகத்தினால் வழங்கப்படும் புறப்படுவதற்கு முன்னரான பயிற்சி | முகவர் நிலையம் |
| புறப்படுவதற்கு முன்னரான பயிற்சிக்கான சீருடை | முகவர் நிலையம் |
| மருத்துவ பரிசோதனைக்காக கிராமத்திலிருந்து நகரத்திற்கு வருகைதருதல் மற்றும் தேவையேற்படும் பட்சத்தில் இரவு தங்குதல் | புலம்பெயர் உழைப்பாளி |
| வீட்டிலிருந்து விமான நிலையத்திற்கு செல்லுதல் | புலம்பெயர் உழைப்பாளி |
| விமானநிலையத்திலிருந்து தொழிலிடத்திற்கு செல்லுதல் | புலம்பெயர் உழைப்பாளி |

- மனைசார் பணியாளரகளாக வளைகுடா ஒத்துழைப்பு பேரவையின் நாடுகளை தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கு செல்பவர்கள் இந்த செலவுகள் அனைத்தையும் தாங்களே பொறுப்பேற்க வேண்டும்.
- தோட்டப் பணியாளர்கள், சாரதிகள், தொழிற்சாலை ஊழியர்கள், தொழிலாளிகள் போன்ற மனைசார் பணியாளர் வகையை சாராத பணியாளர்கள் மேற்படி அனைத்து செலவுகளையும் தாங்களே பொறுப்பேற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

தொழில் முகவர் நிலையமொன்றைப் பற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறைகளுக்காக கையேடு 2ஐ பார்க்கவும்.

பயன்படுத்தக்கூடிய கருவிகள்: (The sale) விற்பனை மனித வஞ்சக்கடத்தல் மற்றும் கட்டாய ஊழியம் ஆகியவற்றை தடுப்பதைப் பற்றிய படம் (விசேடமாக தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்காக உண்மையான சம்பவங்களை ஒரு கதை வடிவில் காட்டுகின்ற ஒரு படம்)

## 1.5 புறப்படுவதற்கு முன்னரான ஆயத்தங்கள்.

வேண்டப்படுவனபவைகள்:

**அ. குடும்ப பின்னணி அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளுதல்.**

குடும்பப் பின்னணி அறிக்கை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வழங்கப்படுகின்றது. நீங்கள் உங்கள் தீர்மானத்தை மிகவும் அருகாமையிலுள்ள பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வேண்டும்.

**ஆ. செல்லுபடியான கடவுச்சீட்டொன்றை பெற்றுக்கொள்ளுதல்.**

ஒரு கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வது எப்படி (பின்னிணைப்பு 1 பார்க்க) கடவுச்சீட்டு இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்றது.

**இ. வீசாவை பெற்றுக்கொள்ளுதல்**

தொழில் வீசா என்பது வெளிநாட்டு பிரசையொருவரை தற்காலிகமாக ஒரு நாட்டில் வாழ்வதற்கும் பணியாற்றுவதற்கும் அனுமதியளிக்கும் குடிவரவு ஆவணமாகும்.






கடவுச் சீட்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும் முத்திரை




மாதிரி வீசா

## ஈ. வீசாவை பெற்றுக்கொள்வதற்கு தேவைப்படும் ஆவணங்கள்.

I செல்லுபடியான கடவுச்சீட்டு

II. மருத்துவ அறிக்கை கையேடு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டதும் பதிவுசெய்யப்பட்டதுமான மருத்துவ நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அமைதல் வேண்டும்.

III. பொலிஸ் அறிக்கை: சில நாடுகளுக்கு பொலிஸ் அறிக்கை தேவைப்பாடாக அமைகின்றது. – கட்டார், குவைட் (அவ்வாறான தேவைப்பாடு உள்ள நாடுகளின் இந்றைப்படுத்தப்பட்ட தகவல்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்)

## உ. புறப்படுவதற்கு முன்னரான சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதல்

புறப்படுவதற்கு முன்னர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியத்தில் பதிவுசெய்துகொள்வதற்காக சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொள்வது கட்டயாமானதாகும். பயிற்சி நிகழ்ச்சித்திட்டஙகளும் பயிற்சி வகைகளும் குறிப்பிட்ட ஒவ்வொரு தொழில்களுக்கும் சேவைகளுக்கும் ஏற்புடையவாறு தனிவேறான விதத்திலேயே வடிவமைக்கப்பட்டுள்ளன.

பங்கேற்பாளர்களின் வருகை மற்றும் பங்கேற்பு சம்பந்தமாக கணினி முறை ஊடாக கூர்ந்து கவனம் செலுத்தப்படுகின்றது. வருங்காலத்தில் புலம்பெயரவிருப்பவர்கள் பயிற்சியில் இடையறாமல் பங்குபற்றுவதை உறுதிசெய்யும் பொருட்டு உயிரியில் சாரந்த முறைமையொன்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**ஊ. பயிற்சிக்கான முன்தேவைகள்.**

| | |
|---|---|
| தேவயையான ஆவணங்கள் | செல்லுபடியான கடவுச்சீட்டும் அதன் இரண்டு நிழற்பிரதிகளும், தேசிய அடையாள அட்டையும் அதன் இரண்டு நிழற்பிரதிகள், (வெளிநாட்டிற்கு அனுப்பும் முகவர் நிலையத்தின் வசம் கடவுச்சீட்டு தக்கவைக்கப்பட்டிருக்குமாயின் பயிற்சிபெறுனர் கடவுச்சீட்டின் நிழற்பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் தேசிய அடையாள அட்டையையும் முகவர் நிலையத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட கடவுச் சீட்டு புகைப்பட அளிவிலான இரண்டு புகைக்கபடங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.) |
| உடல் நிலை | வேட்பாளர் உடல் ரீதியர்கவும் உளரீதியாகவும் தகுதிநிலையில் இருக்க வேண்டுமென்பதுடன் பார்வை மற்றும் கேட்கும் திறனில் குறைபாடு போன்ற எந்தவிதமான உடல் ரீதியான பலவீனங்களையும் கொண்டிருத்தல் ஆகாது. சில தொழில் தருநர்கள் சில உடல் உபாதையுடையவர்களை நிராகரிக்கக்கூடும். |
| வயது | • பயற்சி பெறுபவரின் உண்மையான வயது 23- 50 வயதாக இருத்தல் வேண்டும்.( மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஆண் மற்றும் பெண் மனைப் பராமரிப்பு உதவியாளர்கள்)<br>• சவுதி அரேபியாவிற்கான மனைசார் பணியாளர்கள் (பெண்கள்) 25 வயதுக்கும் மேல்<br>• சிங்கப்பூர் மற்றும் சவுதி அரேபியா நாடுகளுக்கான மனைசார் பணியாளரகள் (பெண்கள்) [illegible] 25 வயதுக்கு மேல்<br>• அனைத்து நாடுகளுக்குமான மனைசார் பணியாளர்கள் (பெண்கள்) 21 வயது<br>• 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் உடல் தகுதிநிலையை கண்டறிவதற்கான பரிசோதனைக்கு உள்ளாக வேண்டுமென்பதுடன் ஒரு MBBS மருத்துவரினால் உறுதிப்படுத்துப்பட்ட மருத்துவ சான்றிதழை சமர்பித்தல் வேண்டும்.<br>• வீட்டுப் பணித்துறையை தவிர்ந்த ஏனைய துறைசார்ந்த தொழிலுக்கு செல்லும் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலான ஊழியர்களும் பயிற்சியில் கலந்துகொள்ளலாம். எவ்வாறாயினும் ஒரு ஆண் வீட்டுப் பணிக்கு செல்வாராயின் அவர் 21 வயதை பூர்த்திசெய்தவராக இருத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| எழுத்தறிவு | அவர்களின் தாய் மொழியில் எழுதவும் வாசிக்கவும் இயன்றவர்களாக இருக்கவேண்டுமென்பதுடன் இலக்கங்களை பற்றிய அறிவும் அடிப்படை எண்சார்ந்த அறிவும் இருத்தல் வேண்டும். |
| குடும்ப நிலை | வாய்ப்புள்ள ஒரு வீட்டுத்துறை பெண் ஊழியருக்கு குடும்ப பின்னணி அறிக்கையின் விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டு தேவைப்படுகின்றது. இது ஆளுக்கு ஆள் வித்தியாசமடைகின்றது. (இது வீட்டுத்துறை ஆண் பணியாளர்களுக்க ஏன் ஏற்புடையதாகவில்லை?) தற்போது வீட்டுப்பணியாளர்களாக வெளிநாட்டுக்கு செல்லும் பெண்கள் சம்பந்தப்பட்டதாகவே அதிகமான சிக்கல்கள் தோன்றுகின்றன. ஆகவே இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இந்த நடவடிக்கையை அதற்கு தீர்வு தேடும் முயற்சியாகவே பயன்படுத்துகின்றது. |
| ஏனைய நிபந்தனைகள | கர்ப்பமடைந்திருக்கக்கூடாது<br><br>பால் புகட்டும் தாயாக இருத்தல் கூடாது<br><br>வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக உடல் ரீதியிலும் உடல் ரீதியிலும் தகுதிநிலையில் உள்ளவராக இருத்தல் வேண்டும் |
| பயிற்சிக்கான சீருடை | மேலே- வெள்ளை ரீ சேட்<br><br>கீழே – கருப்பு காற்சட்டை (வீட்டுப் பணிப்பெண்களுக்கு மாத்திரம் முகவரினால் இலவசமாக வழங்கப்படுகின்றது) |
| தங்குமிடவசதி | அநேமகமானவர்களுக்கு பணியகம் அல்லது முகவர்களினால் தங்குமிட வசதி வழங்கப்படுகின்றது. எவ்வாறாயினும் சில சந்தர்ப்பங்களில் பயிற்சிபெறுபவர்கள் தாங்களாகவே தங்குமிட வசதிக்கான ஏற்பாடுகளை செய்துகொள்ளுதல் வேண்டும். |

நாட்டிற்கு எற்றவிதமான பயிற்சி. பயிற்சிக் காலம் மற்றும் செலவுகள் போன்ற புறப்படுவதற்கான பயிற்சி பற்றிய மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக பின்னிணைப்பு 2 பார்க்கவும்.










**எ. ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்ளுதல்.**

i. தொழில் ஒப்பந்தத்தைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள தேவையானது என்ன?

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வெளிநாட்டு தொழில்களுக்காக புலம்பெயர்ந்து செல்லும் அனைவரையும்

புறப்படுவதற்கு முன்னர் பணியகத்தில் பதிவு செய்யுது கொள்ளும் பொருட்டு ஒரு தொழில் ஒப்பந்தமொன்றை கைசாத்திடுமாறு வேண்டுகோள் விடுக்கின்றது. இவ்வாறு செய்வதன் மூலம் தொழில் பாதுகாப்பு உறுதிபடுத்துகின்றது. (இணைப்பு 4 பார்க்க)

புறப்படுவதற்கு முன்னர் தொழிலின் அனைத்து நிபந்தனைகளும் உள்ளடக்கப்பட்ட தொழில் ஒப்பந்தமொன்றை புலம்பெயர்வதற்கு எதிர்பார்த்துள்ள பணியாளர் கைச்சாத்திட வேண்டும். இது ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் அனைத்து நிபந்தனைகளுக்கும் மூன்று தரப்பினரும் (பணியகம், முகவர் மற்றும் உழைப்பாளி) இணங்கியதன் பின்னர் பணியகத்தின் தலைமை காரியாலத்தில் அல்லது பணியகத்தின் மாவட்ட வள மையங்களில் கைச்சாத்திடப்படுகின்றது. புலம்பெயர் உழைப்பாளியின் பாதுகாப்பு மற்றும் நலனோம்புகையை உறுதிப்படுத்தும் பொருட்டு இந்து புதிய ஏற்பாட்டிற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரும் உழைப்பாளியும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

தொழில் வீசாவுடன் செல்லும் அனைத்து உழைப்பாளிகளும் (தொழில்வாண்மையாளர்கள் தவிர்ந்த) பணியகத்தை சாட்சியாகாகக் கொண்டு இந்த ஒப்பந்தத்தை கைச்சாத்திட வேண்டும். சுயமாக செல்லும் வீட்டு துறை பணியாளர்கள் இந்த ஒப்பந்தத்தை இலங்கை தூதரகத்தில் கைச்சாத்திட்டு இங்கு பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

பின்வரும் ஒப்பங்களும் புறக்குறிப்புகளும் ஒப்பந்தத்தில் இருத்தல் வேண்டும்.

ii. ஆட்சேர்ப்பு ஒரு முகவரினால் மேற்கொள்ளப்படுமாயின்.

1. தொழில் வழங்குபவரின் கையொப்பம்.
2. வெளிநாட்டு முகவரின் கையொப்பம்
3. உள்நாட்டு முகவரின் கையொப்பம்
4. தொழில் பெறுபவரின் கையொப்பம்
5. சாட்சியாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரின் கையொப்பம்.

ii. நீங்கள் உங்களின் நண்பர் அல்லது உறவினரால் அனுப்பப்பட்ட வீசாவின் மூலமாக வெளிநாட்டிற்கு செல்வதாயின்,

1. தொழில் வழங்குபவரின் கையொப்பம்
2. தூதரகத்தின் உறுதிப்படுத்தல்.∴மனைசார் பணியாளர்கள் தொழில் வகைகளுக்கு உதவித் தூதர் அலுவலகத்தின் உத்தியோகத்தர்.

3. தொழில் பெறுபவரின் கையொப்பம்
4. பணியகத்தின் உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படும் உறுதிப்படுத்தல்

எனது தொழில் ஒப்பந்தத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது? கையேடு 3ஐ பார்க்கவும் குறிப்பிட்ட சில நாடுகளில் ஆகக்குறைந்த சம்பளமும் நிபந்தனைகளுக்குமாக கையேடு 4ஐ பார்க்கவும்

மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் மனைசார் உழைப்பாளிகளுக்கு ஒவ்வொரு நாடுகளுக்கும் வேறுபட்ட விவரக்குறிப்பீடுடன் கூடிய தனிவேறான ஒப்பந்தங்கள் உள்ளன. மத்திய கிழக்கு நாடுகளுக்கான தேர்ச்சி குறைந்த ஆண் உழைப்பாளிகளுக்கு ஒரு தரப்படுத்தப்பட்ட ஒப்பந்தம் உள்ளதுடன் ஏனைய நாடுகளுக்கு வேறுவிதமான ஒப்பந்தங்கள் உள்ளன.

மாதிரி ஒப்பந்தத்திற்காக பின்னிணைப்பு 4ஐ பார்க்கவும்

பயன்பத்தப்படக்கூடிய கருவிகள்: சேவை ஒப்பந்தத்தைப் பற்றிய விழிப்புணர்வு – பணியகத்தின் காணொளி (வீடியோ படம்) (தமிழில் மாத்திரம் கிடைக்கும்)

உ. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவுசெய்துகொள்ளுதல்

பணியத்தில் பதிவுசெய்துகொள்ளுதல் பற்றிய முக்கியமான தகவல்கள்.

i. **பதிவு செய்துகொள்வதற்காக தேவைப்படும் முக்கியமான ஆவணங்கள்.**

- குடும்ப பின்னணி பற்றிய அறிக்கை
- செல்லுபடியான வீசா
- புறப்படுவதற்கு முன்னரான பணியகத்தின் பயிற்சி சான்றிதழ்
- கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம்.

பணியகத்தில் எதற்காக பதிவுசெய்துகொள்ளுதல் வேண்டும்

ii. **இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் ஏன் பதிவுசெய்துகொள்ள வேண்டும்?**

- 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டத்திற்கேற்ப வெளிநாட்டு

வேலைவாய்ப்புக்காக செல்லும் அனைத்தும் உழைப்பாளிகளும் புறப்படுவதற்கு முன்னர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியத்தில் தங்களை பதிவு செய்து கொள்ளுதல் சட்ட ரீதியானதான தேவைப்பாடாகும்.

- அது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் நலனோம்புகை சேவைகள் ஊடாக உங்களுக்கும் உங்கள் தொழிலுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் பாதுகாப்பினை வழங்கும்.
- நீங்கள் இப்பணியகத்தில் உங்களை பதிவுசெய்துகொள்ளும் போது அது உங்களுக்கு பல்வேறு சிறப்புரிமைகளை வழங்குகின்றது. இவற்றில் மிகவும் முக்கியமானவை யாவையெனில் உங்கள் தொழில் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் உத்தரவாதத்தை பெற்றுத்தருவதும் ஆயட்காப்புறுதியை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பினை பெற்றுத்தருவதும் ஆகும்.
- அது உங்கள் குடும்ப அங்கத்தவர்களின் பாதுகாப்பையும் நலனோம்புகையையும் உறுதிப்படுத்துகின்றது. வீடமைப்புக் கடன், சுயதொழிலுக்கான கடன்வசதிகள், பாடசாலைக் கல்வி கற்கும் உங்கள் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களையும் ஏனைய உதவிகளையும் வழங்குதல் இவர்களுக்கு வெளிநாட்டு கல்விச் சுற்றுலாக்களில் பங்கேற்பதற்கு உதவுதல், மற்றும் பல்வேறு விதமான நன்மைகளையும் பெற்றுத்தருதல் ஆகியவை இவ்வாறாக கிடைக்கும் சில நலன்கள் அல்லது வசதிகள் ஆகும்.(பின்ணைப்பு 4 – பணியகத்தின் நலனோம்புகையும் சேவைகளும்)

### iii. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவுசெய்துகொள்வேண்டியவர்கள் யாவர்?

வெளிநாட்டு தொழிலுக்காக முதன் முறையாக இலங்கையை விட்டு செல்பவர்கள் அல்லது தங்களது முதலாவது ஒப்பந்தத்தை பூர்த்திசெய்த பின்னர் மீண்டும் செல்லவிருப்பவர்கள், அல்லது வெளிநாட்டில் இருக்கும்போதே தங்களது தொழிலை மாற்ற விரும்புபவர்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் அல்லது அவர்கள் இருக்கும் நாட்டிலுள்ள இலங்கை தூதரகத்தில் தங்களை பதிவுசெய்து கொள்ளுதல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு.**

(அ) புறப்புடுவதற்கு முன்னர் நீங்கள் பணியகத்தில் பெற்றுக்கொள்ளுகின்ற பதிவு இரண்டு வருடங்களுக்கு மாத்திரம் செல்லுபடியாகும் என்பதை அறிந்துவைத்திருத்தல் மிகவும் முக்கியமானதாகும்.

(ஆ) நீங்கள் தங்கியிருக்கும் காலத்தை நீடித்து உங்கள் வெளிநாட்டு வேலையை தொடர வேண்டுமாயின் அல்லது தொழில் தருநரை மாற்றிக்கொள்ள வேண்டுமாயின் உங்களையும் உங்கள் தொழில் வழங்குநரையும் நீங்கள் பணியாற்றும் நாட்டிலுள்ள இலங்கை தூதரகத்தில் அல்லது உயர் ஸ்தானிகர் அலுவலகத்தில் மீள்பதிவு செய்துகொள்ள வேண்டும் அல்லது உங்கள் உறவினர்களைக் கொண்டு உங்களை இலங்கையில் பணியகத்தின் தலைமைக் காரியாலயத்திலோ அல்லது மாவட்ட அலுவலகத்திலேயோ பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

(இ) நீங்கள் உங்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்துகொள்வது அல்லது உங்கள் பதவினை புதுப்பித்துக்கொள்வது உங்கள் பெருமளவிலான நன்மைகளைப் பெற்றுத்தரும். நீங்கள் உங்களை பதிவு செய்துகொண்டப பின்னர் பணியகம் உங்கள் தொழில் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளையும் விதிகளையும் வழங்குவதற்கும் உங்கள் குடும்பத்தின் நலனோம்புகையின் பால் பாதுகாப்பையும் கரிசனையையும் கொண்டிருப்பதற்கு கடப்பாடுடையதாக இருக்கின்றது.

(ஈ.) பதிவு வகை, கட்டணம் மற்றும் வீசா வகை.

பதிவுக்காக ஒரு தொழில் ஒப்பந்தமும் செல்லுபடியான வீசாவும் தேவையாக இருக்கின்றது. தொழில் நிபந்தனைகளை தெளிவாக குறித்துரைக்கும் ஒரு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் இல்லாமல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள முடியாது. கொடுப்பனவு செலுத்தும் முறைமை மாதாந்த சம்பளத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். – மாற்றத்திற்கு உள்ளாகலாம்.

| | | |
|---|---|---|
| முதன் முறையாக | மனைப் பராமரிப்பு உதவியாளர் - பெண் | அண்ணளவாக ரூ. 7,700 (பதிவு வற் வரியற்றது) |
| மீண்டும் செல்லும் போது | மனைப் பராமரிப்பு உதவியாளர்கள் - பெண் (அதே தொழில் தருநர்) | - ரூ. 3,200 |
| மற்றைய அனைத்து தொழில் வகைகளுக்கும் | | ரூ. 10,200 |

**கேள்வி பதில் வழியிலான தகவல் வழங்கல்**

1. வெளிநாட்டில் தொழில் புரியும் உழைப்பாளி ஒருவர் ஏதேனுமொரு பிணக்கு சம்பந்தமாக இலங்கை தூதரகத்தின் உதவியை நாட முடியுமா?

   அனைத்து உழைப்பாளிகள் சம்பந்தமாகவும் தூதரகம் தனது தொழில் பிரிவு (labour division) ஊடாக உதவிகளை வழங்கும். இலங்கை புலம்பெயர் உழைப்பாளிகளுக்கு உதவுவதற்காக தொழிலாளர் பிரிவினைக் கொண்ட 15 இலங்கை தூதரகங்கள் இயங்குகின்றன. இவை அபுதாபி, டுபாய், ரியாத், ஜெத்தா, குவைட், லெபனன், ஜோர்டான், ஓமான், மாலைத் தீவு, கட்டார், தென் கொரியா, சிங்கப்பூர், மலேசியா, யப்பான் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளில் அமைந்துள்ளன.

2. முல ஒப்பந்த காலத்திற்கு பின்னர் நீங்கள் தொழில் வழங்குநரை மாற்ற விரும்பினால் (அந்த நாட்டில் அனுமதிக்கப்படின்) அதற்கான நடைமுறை யாது?

   மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப்பெண்களுக்காக தொழில் தருநர் மீளச் செலுத்தப்படாத ஐ.அ.டொலர் 400 செலுத்தி இலங்கை தூரகத்தில் பதிவு செய்துகொள்ளலாம்.

3. புறப்படுவதற்கு முன்னரான பயிற்சிக்காக நான் எங்கு செல்ல வேண்டும்.?

   இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 24 பயிற்சி நிலையங்களுக்கு மேலதிகமாக தனியார் பயிற்சி நிலையங்களிலிருந்தும் பதிவு செய்துகொண்டவர்கள் பயிற்சியினை பெற்றுக்கொள்ளலாம்.

தனியார் பயிற்சி நிலையங்கள் அனுமதிப்பத்திரமுடைய முகவர்களினாலே நடாத்தப்படுகின்றதும் பணியகத்தினால் அனுமதிக்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற நிலையங்களாகவும் இருக்கின்றன. ஆயினும் இவை பணியகத்தினால் மீளாய்வுக்கு உட்படுத்தப்டுகின்றது. இதற்கான பதிவுக் கட்டணம் சமமானதாகும்.

**பணியகத்தினதும் தனியாரினதும் பயிற்சி நிலையங்கள் மற்றும் அவற்றின் தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றின் விபரப்பட்டியலை பார்வையிடுவதற்காக பின்னிணைப்பு 3 பார்க்கவும்.**

4. மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏதேனும் விசேட தேவைப்பாடுகள் உள்ளனவா?

   சவுதி அரேபியாவிற்கு செல்லும் அனைவரும் NVQ 3 மட்டத்தை சித்தியடைய வேண்டுமென்பதுடன் புறப்படுவதற்கு முன்னரான 21 நாள் வதிவிட பயிற்சியையும் பெற்று, செல்வதற்கு முன்னர் சான்றிதழையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

5. கொரியாவில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு எம்மாதிரியான தயார்நிலை தேவையாக இருக்கின்றது?

   கொரிய அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான ஒப்பந்தத்தின் பிரகாரம் கொரிய அரசாங்கம் இலங்கையர்களுக்கு ஒவ்வொரு வருடமும் நிலையான எண்ணிக்கையைக் கொண்ட தொழில் வாய்ப்புகளை வழங்கிவருகின்றது கொரியாவில் தொழிலுக்காக செல்லவிருக்கும் விண்ணப்பதாரிகள் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 33 நிலையங்களில் கொரிய மொழியை கற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் புறப்படுவதற்கு முன்னரான 10 நாள் பயிற்சியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

## 1.6 புறப்படுவதற்கு முன்னரான சுய ஆயத்தம்./ சுய மதிப்பீடும் புறப்படுவதற்கான சரிபார்த்தல் பட்டியலும்

நீங்கள் அனைத்து சட்ட விதிமுறை ஒழுங்களையும்ஃநடைமுறைகளையும் பின்பற்றிய பின்னர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் நீங்கள் உங்கள் பயணத்திற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளலாம்.

**அ. இச்சந்தர்ப்பத்தில் நீங்கள் பின்வரும் விடயங்களை கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.**

நீங்கள் அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டு நீங்கள் இந்நாட்டில் இல்லாதபோது உங்களது பொறுப்புகளையும் கடமைகளையும் ஈடுசெய்யும் பொருட்டு பொருப்பாளர்களை நியமித்தல் வேண்டும்.

I. நீங்கள் உங்கள் பிரதேசத்திலுள்ள பின்வரும் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுவதுடன் அவர்களுக்கு அறிவிப்பதன் மூலமாக அவர்களுக்கு உங்கள் குடும்பத்திற்கு உதவுவவும் அவர்களது நலனோம்புகையை பற்றி கவனம் செலுத்தவும் முடியும் என்பதுடன் நீங்கள் திரும்பி வந்ததும் உங்களுக்கும் உதவ முடியும்.

- I. அபிவிருத்தி உத்தியோகத்தர் - உங்கள் பிரதேசத்திலுள்ள ஆகுநீறு
- II. கிராமசேவையாளர்
- III. குடும்ப சுகாதார உத்தியோகத்தர் மற்றும் பொதுசன சுகதார உத்தியோகத்தர்
- IV. அதிபர்களும் ஆசிரியர்களும் (உங்கள் பிள்ளைகள் பாடசாலை செல்பவர்களாயின்)
- V. உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் (உங்களுக்கு மேலதிக தகவல்கள் தேவையாயின்)
- VI. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகத்தர் (நீங்கள் உங்களை பதிவு செய்துகொள்ளலாம். அவர்கள் உங்கள் குழந்தையின்˙பாதுகாப்பை மேற்பார்வை செய்வார்கள்.)
- VII. ரட்டவிருவோ உத்தியோகத்தர்கள்.

ஆ. மேலும் தயவுசெய்து பின்வரும் ஆவணங்களை உங்கள் வீட்டில் வைத்துவிட்டு செல்லுங்கள் அல்லது பாதுகாவலரின் பாதுகாப்பில் வைத்திருக்க ஆவண செய்யுங்கள்.

- II. உங்கள் கடவுச்சீட்டின் நிழற்பிரதி
- III. உங்கள் தொழில் ஒப்பந்தத்தின் பிரதி
- IV. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஆட்சேர்ப்பு முகவர் நிலையத்தை தொடர்பு கொள்ளக்கூடிய தகவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தொடர்பு விபரங்கள்.

V. நீங்கள் தொழில் புரியப்போகின்ற நாட்டின் இலங்கை தூதரகத்தின் விபரங்கள்.

தொழிலாளர் பிரிவுடன் கூடிய இலங்கை தூதரகங்கள் பற்றிய பட்டியலையும் அவற்றின் தொடர்பு விபரங்களையும் பின்னிணைப்பு 5 இல் பார்க்கவும்.

இலங்கை தூதரங்களின் தொழிலாளர் பிரிவினால் வழங்கப்படும் சேவைகளுக்காக கையேடு 5ஐ பார்க்கவும்

புறப்படுவதற்கு முன்னரான சரிபார்த்தல் பட்டியலுக்காக கையேடு 6ஐ பார்க்கவும்

## இ. பயணப்பொதிகள், கைப்பயணப்பெட்டிகள், கைப்பைகள்

I. உங்கள் பயணச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அளவை விட உங்களின் பயணப்பொதிகளின் நிறை அதிகரிக்காமல் இருப்பதற்கு வகைபார்த்துக்கொள்ள வேண்டும்.

II. கைப் பயணப்பொதிகள் 7 கிலோகிராம் நிறையை விட அதிரகரிக்க கூடாதென்பதுடன் தடைசெய்யப்பட்டுள்ள பொருட்கள் (கூர்மையான பொருட்கள். சுடுகலன்கள், எளிதில் தீப்பற்றிகொள்ளக்கூடியவைகள், பெருந்தொகையான மதுபானங்கள்) உங்கள் கைப்பொதியில் இல்லை என்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள்.

III. கடவுச்சீட்டு மற்றும் அதன் பிரதி, பயணச்சீட்டு, பர்ஸ் (ஆகக்குறைந்தது 100 ஐ.அ.டொலர்) வெளிநாட்டு, உள்நாட்டு முகவர்கள் மற்றும் தொழில் வழங்குநர் ஆகியோரின் விபரங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் மற்றும் தூதரகத்தின் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் தொடர்பு முகவரிகள் (முகவர் அல்லது பணியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட) பேனை ஆகிய மிகவும் முக்கியமானவைகள் எல்லாம் அதில் உள்ளதென்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

IV. உங்கள் தனிப்பட்ட பொருட்கள் (பவுடர். சீப்பு போன்ற தேவையானவைகள்) மருந்துவகைகள், மற்றும் 3 மாதங்களுக்கு தேவையான உடைகள் ஆகியவை பிரதான பயணப்பொதியில் எடுத்துவைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

V. பயணத்தின் போது இலகுவாக இருக்கக்கூடியதும் கலாச்சார ரீதியில் பொருத்தமானதாக இருக்கக்கூடியவாறும் உடைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

நீங்கள் ஒரு மேலங்கி மற்றும் கழுத்தில் சுற்றும் சால்வை போன்றவற்றை எடுத்துச்செல்வது பொருத்தமானதாகும்.

VI. உங்கள் பிரதான பயணப்பொதியில் உங்களுடைய பெயரும் பயண முகவரியும் தெளிவாக எழுதப்பட்ட ஒட்டுச்சீட்டு ஒன்று ஒட்டப்பட்டுள்ளதென்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள்.

VII. உங்களுடைய பயணப்பொதிகள் சிறியதொரு பூட்டைக்கொண்டு பூட்டப்பட்டுள்ளதெனவும் அதன் திறப்பு உங்களிடம் பாதுகாப்பாக இருக்கின்றதெனவும் உறுதிசெய்துகொள்ளுங்கள்.

VIII. அனுமதிக்கப்படாத எந்த பொருட்களையும் நீங்கள் கொண்டுசெல்லவில்லையென உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். (உதாரணமாக, மதரீதியிலான சிலைகள், படங்கள். விலங்குள், சுடுகலன்கள், வெடிமருந்துகள் போன்ற)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் நலனோம்புகை நிலையமாகிய “சஹன பியசவில்” வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக பரீட்சயம் உள்ளவராக இருங்கள். அது கஷ்டங்களுக்கு மத்தியில் நாடு திரும்புகின்ற புலம்பெயர் உழைப்பாளிகளுக்கு உதவியளிக்கின்றது. மேலும் இது புலம்பெயரும் உழைப்பாளிகளுக்கும் புலம்பெயர்வதற்கு முன்னரும் உதவிகளை வழங்கிவருகின்றது.

# பிரிவு 2 புறப்படுதல்

## 2.1 விமானநிலையத்திற்கு பயணித்தல்.

I. இலத்திரணியல் பயணச்சீட்டு முறைமைப் பற்றி அறிந்திருங்கள் (நு- வுஐஊமநவ)

II. பயணச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விமான நிலையம், விமானத்தின் பெயர், விமான நேரம் போன்றவற்றை நன்றாக புரிந்துகொண்டுள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

III. பயணச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விமான நேரத்திற்கு மூன்று மணித்தியாலங்களுக்கு முன்னராக விமான நிலையத்தில் இருப்பதற்கு வழிவகுக்கும் வகையில் போக்குவரத்து வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

IV. உங்கள் விமான சேவை வழங்குநரிடம் நீங்கள் சைவ உணவு அல்லது ஹலால் போன்ற எவ்வாறான உணவை உட்கொள்வதற்குத் விரும்புகின்றீர்கள் என்று அறிவிக்கலாம்.

V. புறப்படுவதற்கு முன்னர் களைப்பாறி சுத்தமான உடையை அணிந்துகொள்வதற்கு ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

VI. உங்களது பயணச்சீட்டு, கடவுச்சீட்டு, வீசா, விமான விபரங்கள், நீங்கள் செல்லும் நாட்டின் விமான நிலையத்தில் உங்களை ஏற்றுக்கொள்கின்றவர் பற்றிய விபரங்கள் மற்றும் அந்நாட்டிலுள்ள இலங்கை தூதரகத்தின் தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை மிகவும் பாதுகாப்பானதொரு இடத்தில் அல்லது வசதியாக எடுப்பதற்காக உங்கள் கைப்பையில் வைத்துக்கொள்ளுங்கள்.

VII. உங்களுக்கு முன்பின் தெரியாதவர்களுக்கு உங்களுடைய தனிப்பட்ட தொட்பு இலக்கத்தை கொடுக்க வேண்டாம். அவ்வாறு செய்வதின் மூலம் நீங்கள் வஞ்சக் கடத்தலுக்கு உட்படவோ ஏமாற்றப்படவோ கூடும்.

## 2.2 2.2விமான நிலையத்தில்.

முதலாவது ஒப்பந்தக் காலம் பூர்த்திசெய்யப்பட்டதையடுத்து கிடைக்கும் லீவு முடிவடைந்த பின்னர் பயணிப்பவர்களுக்கு அல்லது சுயமாக ஏற்பாடு செய்து கொண்ட வழிவகை மூலம் முதன் முறையாக வெளிநாட்டிற்கு பயணிப்பவர்களுக்கு ஏதெனுமொரு தவிர்க்க முடியாத காரணத்தால் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து

கொள்ள இயலாமல் போய்விடின் அவர்கள் விமானநிலையத்திலுள்ள பணியகத்தின் கருமபீடத்தில் பதிவுசெய்துகொள்ள முடியும். எவ்வாறாயினும், வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தின் மூலமாக பயணிப்பவர்கள் தங்களை இந்த கருமபீடத்தில் பதிவு செய்துகொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படுவதில்லை.

- விமானநிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் தகவல் பலகையில் தரப்பட்டுள்ள விபரங்களின் படி அல்லது விமான நிலையத்தில் விடுக்கப்படும் அறிவித்தல்களின் அடிப்படையில் நீங்கள் சரியான உட்புகும் கருமபீடத்திற்கும் சென்றுள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் எவ்வித அனுமதிக்கப்படாத பொருட்களையும் எடுத்துச்செல்லவில்லை என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு சில சமயங்களில் சுங்க அதிகாரிகள் உங்களை சோதனையிடக்கூடும்.
- நீங்கள் பயண ஆயத்த கருமபீடத்திற்கு நுழைவதற்கு முன்னர் உங்கள் கடவுச்சீட்டும் பயணச்சீட்டும் பணியக உத்தியோகத்தர் ஒருவரினால் பரிசோதிக்கப்படும். உங்கள் பயணப்பொதிகளும் இரண்டாவது தடவையாக பாதுகாப்பு சோதனைக்கு இடப்படும்.
- உங்கள் பயணப்பொதியுடன் உங்களுக்கு அறிமுகமில்லாத எந்தவொரு ஆளினதும் பொதிகளை எடுத்துச்செல்ல வேண்டாம். அப்பொதிகளில் சட்டவிரோதமான பொருட்கள் இருக்கக்கூடும்.
- உங்கள் கடவுச்சீட்டையும் விமானச் சீட்டையும் பயணப்பொதிகளையும் சம்பந்தப்பட்ட விமான சேவையின் கருமபீடத்திற்கு ஒப்படைத்து விமானத்தில் ஏறுவதற்கான அனுமதிப்பத்திரத்தையும் பயணப்பொதிக்கான ஸ்டிக்கரையும் (ஒட்டுத்தாளையும்) பெற்றுக்கொள்ளுங்கள்.
- உங்களது கைப் பயணப்பொதியை அல்லது கைப்பையை விமானநிலையத்தல் அநாதரவாக விட வேண்டாம்.
- நீங்கள் பயண அட்டையை உரியவாறு பூர்த்திசெய்துள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
- குடியகல்வு கருமபீடத்திற்கு சென்று உங்களது கடவுச்சீட்டையும் விமானதமேறும் அனுமதியையும் மெய்யுறுதி செய்துகொள்வதற்காகவும் மேலொப்பம் இடுவதற்காகவும் சமர்ப்பியுங்கள்.
- உங்கள் விமானமேறும் அனுமதியட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களையும் பொது அறிவித்தலில் கூறப்படும் அறிவித்தலையும்

கவனத்திற் கொண்டு தீர்வையற்ற பிரதேசம் வழியாக விமானத்தில் ஏறும் சரியான வாயில் வரை சென்று காத்திருக்கும் பிரதேசத்திற்கு நுழைந்து விமான பணியாட்களினால் விமானத்தில் ஏறுமாறு விடுக்கப்படும் அறிவித்தல் கிடைக்கும் வரை காத்திருங்கள்.




விமானத்திற்குள் பிரவேசிப்பதற்கான அனுமதிப்பத்திரம்(போடிங் பாஸ்)




எம்பாகே'ன் காட்

## 2.3 விமானத்தில்.

I. விமானமேறும் அனுமதியட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆசன இலக்கத்திற்கு அமைய நீங்கள் அமருவதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

II. உங்கள் தலைக்கு மேலாக விமானத்தில் அமைக்கப்பட்டுள்ள வானறையில் உங்கள் கைப்பொதிகளை இடுங்கள்.

III. விமானத்திலுள்ள பயணிகள் உதவியாளர்களின் அறிவுறுத்தல்களுக்கு செவிமடுங்கள். அவர்கள் உங்களுக்கு உதவி செய்வதற்காகவே இருக்கின்றார்கள். உங்கள் ஏதேனும் தகவல் அல்லது உதவி தேவைப்படின் அதனை கூச்சமின்றி கேளுங்கள்.

IV. பட்ஜெட் விமான சேவை அல்லது சிக்கன விமான சேவை தவிர்ந்த ஏனைய விமான சேவைகளில் உங்களுக்கு உணவும் பானங்களும் இலவசமாக வழங்கப்படும்.

V. புறப்படுவதற்கு முன்னரான பயிற்சியில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதற்கிணங்க விமான மலசலகூடத்தைப் பயன்படுத்துங்கள்.

VI. ஏனைய பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படா வண்ணம் அமைதியான முறையில் நடந்துகொள்ளுங்கள்.

# பிரிவு 3 குறித்த நாட்டை அடைதலும் தொழிலில் ஈடுபடுதலும்.

## 3.1 குறிப்பிட்ட நாட்டை வந்தடைதல்.

I. உங்களுக்கு விமானத்தில் வழங்கப்பட்ட அல்லது தரையிறங்கும் விமானநிலையத்தின் குடிவரவு கருமபீடத்தினால் வழங்கப்பட்ட தரையிறங்கும் அட்டையை உரிய முறையில் பூர்த்திசெய்துள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். (ஆநேகமான மத்திய கிழக்கு நாடுகளில் இவ்வட்டை பயன்படுத்தப்படுவதில்லை.)

II. உங்கள் வருகையை உறுதிசெய்யும் வகையில் உங்கள் கடவுச்சீட்டில் குடிவரவு முத்திரை குத்தப்பட்டுள்ளதென உறுதிசெய்துகொள்ளுங்கள்.

III. உங்களது பயணப்பொதிகளை சம்பந்தப்பட்ட பயணப்பொதி பகுதியில் இருந்து பெற்றுக்கொள்ளுங்கள். உங்களது பயணப்பொதி தவறும் பட்சத்தில் காணாமற் போன பயணப்பொதிகளுக்கான கருமபீடத்தின் உதவியை நாடலாம்.

IV. சுங்கம் வழியாக வெளியேறும் வாயிலை அடைவதற்கு உரிய அறிவுறுத்தல்களை பின்பற்றியுள்ளீர்கள் என உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

V. உள்ளூர் முகவரினால் ஆலோசனை வழங்கப்பட்டதற்கேற்ப வெளிநாட்டு முகவரின் பிரதிநிதியை அல்லது தொழில்தருநரை சந்தியுங்கள்.

VI. நீங்கள் சரியான நபரை சந்தித்துள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்டவரின் அடையாளத்தை மெய்யுறுதி செய்துகொள்ளுங்கள்.

VII. உங்களுடைய தொழில் இடத்திற்கு பாதுகாப்பாக சென்றடைவதற்கு அவர்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.

VIII. நீங்கள் பாதுகாப்பாக வந்து சேர்ந்துவிட்டீர்கள் என்பதை உங்கள் குடும்பத்துக்கு அறிவியுங்கள்.

IX. நீங்கள் சென்றடைந்த நாட்டில் உங்களை அழைத்துச் செல்வதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரின் வெளிநாட்டுப் பிரதிநிதி அல்லது தொழில் தருநர் வருகை தராவிட்டால் நீங்கள்

சென்றடைந்த நாட்டின் இலங்கை தூதரகத்திற்கு உங்கள் வருகையைப் பற்றி கட்டாயமாக அறிவிப்பதற்கு ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

**சென்றடைய வேண்டிய இடத்திற்கு முன்னர் மற்றுமொரு விமானநிலையத்தில் இடைமாற வேண்டுமாயின்.**

I. உங்களுடைய விமானம் நீங்கள் சென்றடைய வேண்டிய இடத்திற்கு நேரடியாகவே பயணிக்கப் போகின்றதா அல்லது நிங்கள் மற்றுமொரு விமானநிலையத்தில் இடைமாற வேண்டிய தேவை ஏற்படுமா என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

II. உங்களுக்கு உதவி தேவையெனின் தகவல் வழங்கும் கருமபீடத்துடன் தொடர்புகொள்ளலாம்.

III. நீங்கள் விமானத்தை மாற்ற வேண்டுமெனின் அடுத்த விமானம் புறப்படும் நேரம் விமான நேரம், விமானம் நிற்கும் இடத்தின் இலக்கம் போன்ற விபரங்களை உங்கள் விமான சீட்டின் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

IV. நீங்கள் முதலாவது விமானத்திலிருந்து தரையிறங்கிய பின்னர் இடைமாறும் விமானநிலையத்தில் அடுத்த விமானத்தில் ஏறுவதற்கான வாயில் இலக்கத்தை அறிந்து எவ்வித தாமதமுமின்றி உடனடியாக அவ்விடத்திற்கு செல்லுங்கள்.

V. பாதுகாப்பு சார்ந்த நடைமுறைகளை பின்பற்றப்பட்டவுடன் குறிப்பிடப்படும் புறப்படுதல் வாயிலுக்கு செல்லுங்கள்.

## 3.2 பணியாற்றுதல்/தொழிலில் ஈடுபடுதல்

அ. பணியுடன் தொடர்புடைய கடமைப்பொறுப்புகள்.

I. நீங்கள் தொழில் புரியும் காலத்தில் பாதுகாப்பு காரணங்களுக்காக உங்களின் கடவுச்சீட்டை உங்களுக்கு தொழில் வழங்கியவர் தன் வசம் வைத்துக்கொள்வதால் உங்களின் கடவுச்சீட்டின் பிரதியொன்றை நீங்கள் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். மேலும், உங்களின் கடவுச்சீட்டின் இலக்கத்தை உங்களின் செல்லிடத் தொலைபேசியிலோ அல்லது பிறிதொரு பாதுகாப்பான இடத்திலோயோ குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.

II. உங்களுடைய தொழில் வழகுநர் உங்களின் தொழில் அனுமதிப்பத்திரத்தையும் தங்குவதற்கான அனுமதிப்பத்திரத்தையும் சரியான தகவல்களை வழங்கியே

பெற்றுக்கொண்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதுடன் இலக்கத்தை உங்களின் செல்லிடத் தொலைபேசியிலோ அல்லது பிறிதொரு பாதுகாப்பான இடத்திலோயோ குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.

III. நீங்கள் தொழில் புரியும் வீட்டுச் சூழலையையும் உங்களை தொழிலுக்கு அமர்த்தியவரையும் நீங்கள் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற கடமைப்பணியையும் பற்றி சிறந்த புரிந்துணர்வைக் கொண்டுள்ளீர்கள் என உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

IV. உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் கடமைகளை யாதென உங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதெனவும் தொழிலுக்கு அமர்த்தியவரின் எதிர்பார்ப்புகள் என்னவெனவும் நீங்கள் போதியளவு புரிந்துணர்வைக் கொண்டுள்ளீர்கள் என உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

V. ஒரு ஆரோக்கியமான உறவினை கட்டியெழுப்பிக்-கொள்ளுங்கள். ஆயினும், நீங்கள் பணியாற்றும் இடத்தில் தொழில் தருநருடனும் குடும்ப அங்கத்தவர்களுடனும் ஏனையவர்களுடனும் ஒரு தொழில்வாண்மை ரீதியிலான இடைவெளியையும் பேணிக்கொள்ளுங்கள்.

VI. ஒவ்வொரு பணியும் அதற்காக ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் செய்து முடிக்கின்றீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

VII. உங்கள் கடமையை உங்களை தொழிலுக்கு அமர்த்தியவரும் குடும்ப அங்கத்தவரகளும் பூரண திருப்தியடையும் வகையில் நிறைவேற்றியுள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

VIII. நீங்கள் உங்கள் தொழில் தருநரினதும் குடும்ப அங்கத்தவர்களினதும் அந்தரங்கத்தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டுமென்பதுடன் உங்களுடைய நாளாந்த கடமைகளை நிறைவேற்றும் போது அவர்களின் அமைதிக்கு குந்தகம் ஏற்படாமலிருப்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

IX. நீங்கள் தொழல் புரியும் இடமும் அங்குள்ள சொத்துக்களும் குடும்ப் அங்கத்தவர்களும் எவ்வித இடரையும் அல்லது ஆபத்தையும் எதிர்நோக்காததொரு நிலை காணப்படுகின்றதென உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

X. நீங்கள் உங்கள் பாதுகாப்பினை உறுதிசெய்து கொள்ளும் வகையில் பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றுகின்றீர்கள் என்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள்.

XI. ஏதெனுமொரு பிரச்சினை இருக்குமாயின் உங்கள் தொழில் தருநருக்கு அறிவித்து தீர்வினை எட்டிக்கொள்ளுங்கள்.

XII. நீங்கள் தொழில் புரியும் காலகட்டத்தில் நீங்கள் உள்ளூர் மொழியில் தொடர்பாடல் மேற்கொள்ளும் திறனை மேம்படுத்திக்கொண்டுள்ளீர்கள் என்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள்.

XIII. உள்ளூர் மொழியை இலகுவாகவும் வேகமாகவும் கற்றுக்கொள்ளும் பொருட்டு நாளாந்தம் பயன்படுத்தப்படும் சொற்களை அதன் அர்த்தத்தையும் எழுதிவைத்துக்கொள்வதற்காக ஒரு குறிப்பெழுதும் கொப்பியை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

XIV. உங்கள் எஜமான் உங்கள் மாதாந்த சம்பளத்தை இலங்கையிலுள்ள உங்கள் வங்கிக் கணக்கிற்கு அனுப்புகின்றார் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். உங்களுடைய வங்கி விபரங்களை உங்கள் தொழில் தருநருக்கு கொடுத்து அவர் வங்கியில் வைப்பீடு செய்துள்ளார் என்பதை உறுதிப்படுத்தக்கூடிய ஆதாரத்தை தருமாறு இயலுமாயின் கோருங்கள்.

XV. உங்களுடைய செல்லிடத் தொலைபேசி போன்றவற்றை ஒதுக்கப்பட்டுள்ள உரிய நேரத்தில் பயண்படுத்துவதற்கும் வேலை நேரத்தில் அவற்றை பயன்படுத்தாமல் இருப்பதற்கும் ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

XVI. இரண்டு வருடகாலம் முடிவடைவதற்கு முன்னர் ஓடிவிடாதீர்கள்.

XVII. நீங்கள் தொழில் புரியும் இடத்திற்கு வெளியே செல்லும்போது உங்கள் தொழில் அனுமதிப்பத்திரம் உங்கள் வசம் உள்ளதென்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

XVIII. நீங்கள் தொழில் புரியும் நாட்டில் தடைசெய்யப்பட்டுள்ள விடயங்களை எப்போதும் மனதில் இறுத்திக்கொள்ளுங்கள்.

## நீங்கள் தொழில் செய்யும் இடத்தல் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தால்.

நீங்கள் தொழில் புரியும் இடத்தில் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் பட்சத்தில்.

உங்கள் தொழில் தருநர் அல்லது மேற்பார்வையாளர் அல்லது ஆட்சேர்ப்பு முகவர் நிலையத்துடன் முதலாவதாக கலந்துரையாடுங்கள். பிரச்சினைகளை தீர்ப்பதையே அனைத்து தரப்பினரும் விரும்புகின்றார்கள். உங்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை குறித்துவைத்துக்கொள்ளுங்கள். பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் நீங்கள் ஒரு அரச சார்ப்பற்ற நிறுவனத்தை, தொழிற் சங்கம், உங்கள் தூதரகம், அல்லது பணியகத்தை ஒரு குடும்ப அங்கத்தவர் ஊடாக தொடர்புகொள்ளுங்கள். நீங்கள் பணியாற்றும் காலத்தில் உங்கள் தொழில் ஒப்பந்தத்திற்கு ஏற்ப தொழில் தருநர் சம்பளம் வழங்காவிட்டால் அல்லது அதனை மீறினால் பணியகத்திற்கோ அல்லது தூதரகத்திற்கோ அறிவியுங்கள். நீங்கள் இலங்கைக்கு திரும்பி வந்த பின்னர் செலுத்தப்படாத சம்பளங்களை அறவீட்டுக்கொள்வதற்கு எந்த வழிவகையும் இல்லை. ஆகவே, நீங்கள் அந்த நாட்டில் இருக்கும்போதே இதனை செய்ய வேண்டும்.

ஆ. தனிப்பட்ட கடமைப்பொறுப்புகள்.

I. உங்கள் தொழில் இடத்தில் அல்லது பணியாற்றும் வீட்டில் மற்றைய பணியாளர்களுடன் ஆரோக்கியமானதொரு உறவினைப் பேணுங்கள்.

II. உங்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தைப் பயன்படுத்தி உங்கள் குடும்ப அங்கத்தவர்களுடன் கிரமமான முறையில் தொடர்பாடலை மேற்கொள்ளுங்கள்.

III. உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொலைபேசி, நீர் வசதி மற்றும் வீட்டு உபகரணங்கள் போன்றவற்றை (மத்திய கிழக்கு நாடுகளிலே சில பண்டங்கள் தட்டுப்பாடாக இருக்கின்றது) தவறான வித்த்தில் பயன்படுத்து வேண்டாம்.

IV. உங்கள் வசம் உள்ள கடவுச்சீட்டு, ஒப்பந்தப் பிரதி திரும்பிவருவதற்கான பயணச்சீட்டுகள் மருத்துவ அறிக்கைகள் போன்ற மிகப் பெறுமதியான ஆவணங்கள் பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துங்கள். மேலும் பொருத்தமானதும் கலாச்சார கூருணர்வுமிக்க உடைகளை நீங்கள் வீட்டில் இருக்கும்

போதும் வேலை இடத்திலும் அணிகின்றீர்கள் என்பதை உறுதிப்படுத்துங்கள்.

V. உங்கள் தனிப்பட்ட சுகாதாரம், பாலியல் சுகாதாரம் (பாலியல் நோய்களிலிருந்து காப்பினைப் பெறுவதற்கு) சுத்தம், தோற்றம் போன்றவற்றை பற்றி விசேட கவனம் செலுத்துங்கள்.

VI. தவிர்க்கமுடியாத காரணங்கள் ஏதேனும் இல்லாவிடின் ஒப்பந்தக் காலம் முடிவடையும் முன்னர் இலங்கைக்கு திரும்பிவருவதை முடிந்தவரை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

VII. வீடுகளிலிருந்தும் வெளியிலிருந்தும் எந்தவொரு பொருளையும் திருடாமல் இருப்பதற்கு ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். இது தண்டனைக்குரிய குற்றம் என்பதுடன் நீங்கள் மறியற்றண்டனைக்கு உள்ளாவீர்கள்.

VIII. உங்கள் தொழில் தருநரினால் பாவனைக்கு உதவாதென ஒதுக்குகின்ற பொருட்களை எல்லாம் சேகரித்து வைத்துக்கொள்ளாதீர்கள். அப்படி சேகரித்தால் அது பெரியதொரு குவியலாக இருக்குமென்பதுடன் அதனை ஏற்றிவருவதற்கான சரக்குக் கட்டணங்களை செலுத்தியே இலங்கைக்கு கொண்டு வரவேண்டும் என்பதால் அதனை செலுத்துவதற்கு தயார் இல்லையாயின் சேகரித்து வைக்காதீர்கள்.

IX. உங்களுக்கு வீட்டு உபகரணங்கள் வாங்கத் தேவையெனின் நீங்கள் திரும்பிவரும் போது விமானநிலையத்திலுள்ள சுங்கத் தீர்வையற்ற கடைகளில் (தீர்வை விதிக்கப்படதாதால் மிகக்குறைந்த விலையில் வாங்கலாம்) பொருட்களை கொள்வனவு செய்யலாம். அவ்வாறு கொள்வனவு செய்யும் போது அதற்கான உத்தரவாதம் கிடைப்பதுடன் அந்த பொருட்கள் பழுதடையும் பட்சத்தில் இலங்கையில் திருத்திக்கொள்ளவும் முடியும்.

X. பொருட்களை கொள்வனவு செய்யும் போது அந்நிய செலாவணி மாற்று வீதத்தை நீங்கள் அறிந்து வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

XI. உங்கள் சம்பளம் உங்கள் வங்கிக் கணக்கில் வைப்பிலடப்படுகின்றதெனவும் அதற்கான ஆதாரம் உள்ளதெனவும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். (வைப்புச் சீட்டுகள்)

உங்களுடைய பணத்தை கையாள்வதற்காக கையேடு 7ஜ பார்க்கவும்

பயன்படுத்தக்கூடிய கருவிகள்: அபேக்ஷா (பாலியல் சுகாதாரம் பற்றிய காணொளி) மதாரா ( குடும்பத்தின் பாலியல் சுகாதாரம் பற்றிய காணொளி) எச்ஜவீ மற்றும் எயிட்ஸ், சக்தி (எச்ஜவீ மற்றும் எயிட்ஸ் பற்றிய காணொளி) ஹரின்கடதுரா (வீடியோ)

## 3.3 பல்வேறு காரணங்களினால் நாடு திரும்புதல் (ஒப்பந்தக் காலம் முடிவடைவதற்கு முன்னர)

I. அந்நாட்டின் மருத்துவ பரிசோதனை பெறுபேறு காரணமாக

II. தொழில் ஈடுபட்டுள்ள காலத்தில் கடுமையான நோய்கள் ஏற்படுதல்

III. தொழில் காரணமாக ஏற்பட்ட காயங்கள்

IV. தனது அன்புக்குரிய ஒருவரின் மரணம்

V. பல்வேறு விதமான தொல்லைகள் காரணமாக தொழில் தருநரை விட்டு ஓடுதல்

VI. சட்டவிரோதமான அல்லது ஆவண ஆதாரமற்ற நிலையின் காரணமாக தடுத்துவைக்கப்பட்ட காலம் பூர்த்தியாகுதல்

VII. மறியற்றண்டனை முடிவடைந்த பின்னர் அல்லது நிறைவேற்றப்பட்ட பின்னர்

## 3.4 ஒப்பந்தக் காலம் முடிவடைதல்.

I. அனைத்து சம்பள கொடுப்பனவுகளும் தொழிலுக்கு அமர்த்தியவரால் வழங்கப்பட்டுள்ளதெனவும், அது காசாக வழங்கப்பட்டிருப்பின் பத்திரமாக உள்ளதென்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

II. வெளியேறுவதற்கான அனுமதிச் சீட்டினை உங்கள் தொழில்தருநர் பெற்றுக்கொடுப்பதற்கு முன்னர் உங்கள் செலுத்தப்படவேண்டிய முழு சம்பளத்தையும் தொழில் தருநர் செலுத்தியுள்ளார் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். இந்த முத்திரை குத்தப்பட்ட பின்னர் உங்களுக்கு உங்கள் எஜமானிடமிருந்து (தொழில் தருநர்) சம்பளத்தை கோர முடியாது.

III. உங்கள் ஒப்பந்தத் காலம் முடிவடையும் திகதியையும் நீங்கள் அங்கேயே தொடர்ந்து வேலையை தொடர விரும்புகின்றீர்களா அல்லது தாய் நாட்டிற்கு திரும்ப விரும்புகின்றீர்களா என்பதைப்

பற்றி உங்கள் தொழில் வழங்குநருக்கு அறிவித்துள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

IV. உங்களுக்கு நாடு திரும்புவதற்கான பயணச்சீட்டு தொழில் தருநரினாலேயே கொள்வனவு செய்து தரப்படவேண்டுமென்பது ஒப்பந்தப் பிரகாரமான கட்டாயமாகும்..

V. புகைப்பட அடையாள அட்டையுடன் கூடிய தொழில் அனுமதிப்பத்திரம், தொழில் தருநரின் பெயர் மற்றும் அடையாள அட்டை, எம்வீ பெயர்கள் மற்றும் கடவுச்சீட்டு இலக்கம். MW வினால் தொழில் அனுமதிப்பத்திரம் கோரப்படவேண்டும். தொழில் அனுமதிப்பத்திரமின்றி வைத்தியசாலையில் அனுமதிக்க இயலாது. ( வருகை மற்றும் தொழிலில் ஈடுபடுதல் பிரிவுகளில் தகவல்களை உட்சேர்க்கவும்)

VI. தொழில் அனுமதிப்பத்திரமின்றி எவருக்கும் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.

VII. தொழில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் இருப்பின் தண்டப் பணமும் மறியற்றண்டனையும் விதிக்கப்படலாம்.

VIII. நீங்கள் இலங்கைக்கு திரும்புவதாயின் உங்கள் குடும்பத்துக்கு அறிவிப்பதுடன் சாத்தியமாகக் கூடிய திகதியையும் அறிவியுங்கள்.

IX. தொழில் புரிந்த காலத்தில் தொழில் தருநரால் உங்களுக்கு வழங்கப்பட்டிருந்து அனைத்து பொருட்களையும் தொழில் தருநருக்கு கையளியுங்கள்.

X. வீட்டுப் பணிப்பெண்களாக தொழில் புரிபவர்கள் தாங்கள் தாய் நாட்டிற்கு திரும்புவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் புதிய ஒருவரை வேலைக்கு அமர்த்தினால் அவருக்கு தேவையான பயிற்சியை தன்னால் பெற்றுத்தர முடியுமென யோசனை முன்வைக்கலாம்.

**நீங்கள் எதனை செய்யக் கூடாது.**

- உங்களுக்கு பதிலீடாக ஒருவரை அனுப்பி வைப்பதாக உங்கள் தொழில் தருநருக்கு உத்தரவாதம் வழங்கவேண்டாம். நீங்கள் இதன்மூலம் ஒரு இடரை சந்திப்பதுன் மற்றையவர்களையும் இடருக்கு உள்ளாக்குகின்றீர்கள்
- பாவிக்க முடியாமல் ஒதுக்கிய மின் உபகரணங்களையும் ஏனைய பொருட்களையும் இலங்கைக்கு கொண்டுவர வேண்டாம்.

- உங்களுக்கு சொந்தமில்லாத பொருட்களை எடுக்க வேண்டாம்.
- தீர்வையற்ற கடைகளிலோ அல்லது விமானத்திலோ மற்றையவர்களுக்காக எந்த பொருட்களையும் வாங்கி ஏமாந்து விடாதீர்கள். நீங்கள் ஏமாற்றப்படுவதற்கும் வஞ்சிக்கப்படுவதற்கும் உள்ளாவீர்கள்.
- நீங்கள் இலங்கையர்களின் மான்பினை பேணிப்பாதுகாத்தல் வேண்டும்.

## 3.4.1 நீங்கள் எதனை செய்யக் கூடாது.

உங்கள் ஒப்பந்தக் காலம் முடிவடைந்த பின்னர் நீங்கள் தாய் நாட்டிற்கு வருவதற்கு ஆர்வமில்லையெனில் உங்களுடைய தொழில் தருநர் உங்களை மேலும் சில காலம் தொழிலில் நீடிக்குமாறு வேண்டுகோள் விடுத்து அதற்கு நீங்கள் இணங்குவீர்களாயின் பின்வரும் விடயங்களை நீங்கள் செய்தல் வேண்டும்.

I. உங்கள் தொழில் அனுமதிப்பத்திரம் அதற்கேற்ப தயாரிக்கப்படுவதாக அல்லது அவ்வாறு மேற்கொள்ளப்படும் செயன்முறைக்கு அனுசரணையாளர் பிரவேசித்துள்ளார் என்பதை பொறுப்புப் பார்த்துக்கொள்ளுங்கள்.

II. உங்கள் திட்டம் தொடர்பாக உங்கள் குடும்ப அங்கத்தவர்களுக்கு அறிவிக்கவும்.

III. வெளிநாட்டுப் முகவருக்கும் உள்நாட்டுப் முகவருக்கும் அறிவிக்கவும்.

IV. இலங்கைத் தூதரகத்திற்கு அறிவித்து ஒப்பந்தத்தை மேலதிக காலப்பகுதிக்காக புதுப்பித்துக் கொள்ளவும்

உங்களுக்கு மிகவும் பாரதூரமான, தவிர்க்க முடியாத பிரச்சினை இல்லாவிடின் உங்களுடைய தொழில் தருநரைவிட்டு தப்பி ஓடிவிட வேண்டாம். நீங்கள் இவ்வாறு தப்பியோட நேர்ந்தால் பொலிஸ் நிலையத்திற்கும் தூதரகத்திற்கும் அறிவியுங்கள். நீங்கள் தப்பியோடி விட்ட உடனேயே அந்த நாட்டிற்கு சட்டவிரோதமாக நுழைந்த ஒருவராக மாறிவிடுகின்றீர்கள். தொழில் தருநரை விட்டு தப்பியோடியமையை காரணமாக வைத்து உங்கள் பொலிஸார் கைது செய்யவும் காலவரையின்றி தடுத்து வைக்கவும் முடியும். இவ்வாறு செய்யக் கூறி உங்களை ஏமாற்றுபவர்களின் வலையில் சிக்கி விடாதீர்கள். அவ்வாறு செய்வதின் மூலம் நீங்கள் பாலியல் நடவடிக்கைகளுக்காக கடத்தப்படுவதற்கு அல்லது உழைப்பு சுரண்டலுக்கு உள்ளாவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

# பிரிவு 4 நாடு திரும்புதலும் மீள் ஒருங்கிணைவும்

## 4.1 இலங்கைக்கு மீண்டும் திரும்பி வருதல்

இலங்கை விமான நிலையத்திற்கு வருகை தருதல்

உங்களுக்கு விமானத்தில் வழங்கப்பட்ட அல்லது தரையிறங்கும் விமானநிலையத்தின் குடிவரவு கருமபீடத்தினால் வழங்கப்பட்ட தரையிறங்கும் அட்டையை உரிய முறையில் பூர்த்திசெய்துள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.(ஆநேகமான மத்திய கிழக்கு நாடுகளில் இவ்வட்டை பயன்படுத்தப்படுவதில்லை.)

I. உங்கள் வருகையை உறுதிசெய்யும் வகையில் உங்கள் கடவுச்சீட்டில் குடிவரவு முத்திரை குத்தப்பட்டுள்ளதென உறுதிசெய்துகொள்ளுங்கள்.

II. உங்களது பயணப்பொதிகளை சம்பந்தப்பட்ட பயணப்பொதி பகுதியில் இருந்து பெற்றுக்கொள்ளுங்கள். உங்களது பயணப்பொதி தவறும் பட்சத்தில் காணாமற் போன பயணப்பொதிகளுக்கான கருமபீடத்தின் உதவியை நாடலாம்.

III. சுங்கம் வழியாக வெளியேறும் வாயிலை அடைவதற்கு உரிய அறிவுறுத்தல்களை பின்பற்றியுள்ளீர்கள் என உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். உங்களுக்கு வெளிப்படுத்துவதற்கு எதுவும் இல்லையெனில் கிறீன் செனல் வழியாக செல்லலாம். உங்களுக்கு கோருவதற்கு எதுவும் இல்லையெனில் நீங்கள் எந்தவொரு ஆவணத்தையும் நிரப்பாமல் கிறீன் செனல் வழியாக செல்லலாம். ஆயினும் அவர்கள் தற்செயலாக உங்களை பரிசோதித்து கேள்விகளைக் கேட்கலாம். உங்களிடம் புதிய மின்சார உபகரணங்கள், மதுபானம் அல்லது சிகரெட் போன்ற பொருட்கள் அளவுக்கதிமாக இருக்குமாயின் நீங்கள் அனைத்து ஆவணங்களையும் நிரப்பி பொதுவான வழியனூடாக வெளியேற வேண்டும்.

IV. உங்கள் பொதிகளில் மற்றையவர்களுடைய பொருட்கள், வியாபாரம் செய்யும் அளவுக்கு பொருட்கள், தடை செய்யப்பட்ட அல்லது மட்டுப்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் இருத்தல் ஆகாது. உதராணமாக ஆபத்தான மருந்துவகைகள், சுடுகலன்கள், வெடிக்கவைக்கும் பொருட்கள் மற்றும் தங்கம் போன்றவை,

V. நீங்கள் வெளிநாட்டில் தங்கியிருந்த காலப்பகுதிக்கேற்ப சுங்கவரியற்ற வகையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான சலுகை கிடைக்கும்.

VI. ஏதேனும் மருத்துவ காப்புறுதி கோரிக்கைகள் இருக்குமாயின் சுங்கம் சம்பந்தப்பட்ட கருமங்கள் முடிவடைந்த பின்னர் பணியகத்தின் கருமபீடத்தை நாடி சம்பந்தப்பட்ட விண்ணப்பங்களை பூர்த்தி செய்தல் வேண்டும்.

VII. நீங்கள் ஏதேனும் பிரச்சினைக்கு முகம்கொடுத்திருந்தால் அல்லது சுகவீனமாக இருந்தால் விமானநிலையத்திலுள்ள பணியகத்தின் கருமபீடத்தை நாடுங்கள்.

VIII. நீங்கள் விமான நிலையத்தில் ஏதேனும் பொருட்களை தவற விட்டிருப்பீர்களாயின் நீங்கள் பயணித்த அல்லது பயணிக்கவிருக்கின்ற விமான சேவையுடன் முதலாவதாக தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு மிக அண்மையிலுள்ள தகவல் கருமபீடத்திற்கு செல்லுங்கள். அங்கு கடமையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் உங்களுக்கு மேலதிக உதவிகளை வழங்குவார்கள்.

IX. நீங்கள் பாதுகாப்பாக நாடு திரும்பிவிட்டீர்கள் என் உங்கள் குடும்ப அங்கத்தவர்களுக்கு அறிவியுங்கள். வருகைதரும் பயணிகளுக்காக வருகைதரும் மற்றும் வெளியேறும் பிரதேசங்களில் தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

X. நீங்கள் அணிந்து வந்த உடைகளை மாற்றி இலங்கையில் உடை அணியும் வகையில் உடைகளை அணிந்துகொண்டு வீடு செல்ல விரும்பினால் சஹன பியச என அழைக்கப்படும் பணியகத்தின் நலனோம்புகை நிலையத்திற்கு செல்வதற்கு விமானநிலையத்திலுள்ள பணியகத்தின் கருமபீடத்தை நாடி வேண்டுகோள் விடுக்கலாம்.

XI. நீங்கள் வெளிநாட்டில் நிகழ்ந்த ஏதேனும் நோய், காயங்கள், தொல்லைகள் அல்லது துஷ்பிரயோகம் காரணமாக நாடு திரும்பி இருப்பீர்களாயின் விமான நிலையத்திலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கருமபீடத்தின் உதவியை நாடலாம். இங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்கள் உங்கள் தேவையின் அடிப்படையில் உங்களுக்கு தேவையான பல்வேறு சேவைகளை வழங்குவார்கள். இது சஹன பியச நலனோம்புகை நிலையத்தின் ஊடாக வழங்கப்படும் சேவைகள் மற்றும் வீடு திரும்புவதற்கான போக்குவரத்து வசதிகளை வழங்குதல் போன்ற பல்வேறு சேவைகளை உள்ளடக்கும்.

XII. நோய், விபத்து, ஏதேனும் இயலாமை, அல்லது துன்புறுத்தல் அல்லது உடல் ரீதியிலான துஷ்பிரயோகம் போன்ற காரணங்களினால் ஒப்பந்த காலத்தை பூர்த்திசெய்வதற்கு முன்னர் நீங்கள் நாடு திரும்புவதற்கு நேர்ந்தால் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் நலனோம்புகை பிரிவிடம் நட்டஈட்டுக்கான வேண்டுகோளை முன்வைக்க முடியும்.

XIII. நீங்கள் வீட்டிற்கு செல்லும் போது விமான நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வாடகை வண்டிகளி மாத்திரம் பயணம் செய்வதற்கு ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் உங்களை அழைத்து செல்வதற்கு விமான நிலையத்திற்கு வருமாறு உங்கள் உறவினர்களுக்கு அறிவித்திருக்காவிட்டால் வீடு செல்வதற்கான போக்குவரத்து வசதியை பெற்றுக்கொள்வதற்கு இடைத்தரகர்களின் உதவியை நாட வேண்டாம். உங்களிடம் பெறுமதியான பொருட்கள் இருப்பதனால் அறிமுகம் இல்லாதவர்களை வாகனமொன்றை வாடகைக்கு அமர்த்தித் தருமாறு கோர வேண்டாம்.

XIV. விமானநிலையத்திலோ அல்லது வெளியிலோ அறிமுகம் இல்லாதவர்களினால் ஏமாற்றப்படுவதற்கு இடமளிக்காதீர்கள்.

இரண்டு சர்வதேச விமானநிலையங்களிலுள்ள சஹன பியச நிலையங்களினால் வழங்கப்படும் சேவைகளுக்காக கையேடு 8ஐ பார்க்கவும்

## 4.2 குறுங்கால மீள் சமூக ஒருங்கிணைவும் மீளப் புலம்பெயர்தலும்.

I. நீங்கள் குறுகிய காலத்திற்கு நாடு திரும்பி மீண்டும் தொழிலுக்கு செல்வதற்கு திட்டத்தைக் கொண்டிருப்பீர்களாயின் நீங்கள் மீண்டும் பணியகத்தில் உங்களை பதிவுசெய்துகொள்ள வேண்டுமென்பதுடன் உங்கள் தொழில் தருநர் அல்லது அனுசரணையாளரின் ஊடாக வீசாவை பெற்றுக்கொள்ளவதற்கு ஏதேனும் ஏற்பாடுகள் இருப்பின் அதனை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அப்படி இல்லாவிடின் குறிப்பிட்ட நாட்டில் அல்லது வேறு நாடுகளில் உள்ள தொழில் வாய்ப்புகளைப் பற்றி தகவல்களைக் கோர முடியும்.

II. யேுஜவுயு நிறுவனத்தின் முதல்நிலை கற்றல் பற்றிய பதிவு முறைமையின் ஊடாக உங்கள் தேர்ச்சியைப் பற்றி நீங்கள் மதிப்பீடொன்றை பெற்றுக்கொள்ளலாம். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியத்தின் ஊடாக மேலதிக தகவல்களை நாட முடியுமி.

III. கடந்த 2 ஆண்டுகளில் நீங்கள் அடைந்துகொண்டு முன்னேற்றத்யைும் அடைவுகளையும் பற்றி திரும்பிப்பார்த்து அவற்றை உங்கள் முதல் நோக்குடன் ஒப்பீட்டுப் பாருங்கள். நீங்கள் உங்கள் நோக்கத்தினை அடைந்துகொண்டுள்ளீர்களா, அதனை அடைந்துகொள்வதற்காக நீங்கள் மேலதிகமாக என்ன செய்தல் வேண்டும்?

IV. போலியான எந்த ஆவணமும் தாயரிக்கப்படவில்லை என்பதையும் சட்ட ரீதியான முறையிலேயே நாடு திரும்புகின்றீர்கள் என்பதையும் உறுதிப்படுத்துங்கள்.

V. ரட்டவிரு நிகழ்ச்சித்திட்டத்தில் இணைந்து அதன நன்மைகளை பெற்றுக்கொள்ளுங்கள்.

ரட்டவிருவோ நிகழ்ச்சித்திட்டம் என்றால் என்ன? அறிந்துகொள்வதற்காக கையேடு 9ஐ பார்க்கவும்

## 4.3 நீண்ட கால சமூக மீள் ஒருங்கிணைவு

I. உங்கள் தேர்ச்சியினை மதிப்பிடுவதற்கான முதல்நிலை கற்றல் பதிவினை நீங்கள் நாடு திரும்பியதும் வுஏநுஊ, யேஜவுயு மற்றும் வுஏயு நிறுவனங்களின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

II. நீங்கள் சொந்தமாக ஒரு வியாபாரத்தை (வர்த்தக நடவடிக்கை) செய்ய விரும்புவீர்களாயின் சமுர்த்தி அதிகாரசபையின் ஊடாக வழங்கப்படும் விசேட வட்டி அடிப்படையிலான கடனை பெற்றுக்கொள்ளும் பொருட்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் நலனோம்புகை பிரிவுடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

III. கடந்த 2 ஆண்டுகளில் நீங்கள் அடைந்துகொண்டு முன்னேற்றத்தையும் அடைவுகளையும் பற்றி திரும்பிப்பார்த்து அவற்றை உங்கள் மூல நோக்குடன் ஒப்பீட்டுப் பாருங்கள். நீங்கள் உங்கள் நோக்கத்தினை அடைந்துகொண்டுள்ளீர்களா, அதனை அடைந்துகொள்வதற்காக நீங்கள் மேலதிகமாக என்ன செய்தல் வேண்டும்?

IV. மீள் ஒருங்கிணைப்புக்கான உதவிகள் பற்றிய தகவல்களை அறிந்துகொள்வதற்காக உங்கள் பிரதேசத்திலுள்ள ரட்டவிருவோ அமைப்பினை நாடுங்கள்.

V. பணியகத்தின் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்று வாழ்வாதாரக் கடன்கள், பயிற்சி போன்ற மீள் ஒருங்கிணைப்பு சம்பந்தமாக இலங்கை வெளிநாட்டு

வேலைவாய்ப்பு பணியகத்திலிருந்து கிடைக்கக்கூடிய அனைத்து சேவைகளையும் பற்றி அறிந்துகொள்ளுங்கள்.

VI. மாவட்ட செயலகத்திற்கு சென்று சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்காக சமுர்த்தி, திவிநெகும, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளடங்கலாக அதற்கொத்த நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து வழங்கப்படும் கடன்களைப் பற்றிய தகவல்களை பெற்றக்கொள்ளுங்கள்.

VII. நீங்கள் நீண்டகாலமாக மருந்து பாவிப்பவராயின் கிரமமாக வைத்திய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் திடகாத்திரமாகவும் உடல் தகுதிநிலையிலும் இருப்பதையும் உங்களால் ஒரு வாழ்வாதார நிகழச்சித்திட்டத்தில் ஈடுபட முடியும் என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு மருத்துவ பரிசோதனைகளை செய்து கொள்ளுங்கள்.

புலம்பெயர் தொழிலாளர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் நாடு திரும்பியோருக்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மூலம் கிடைக்கும் நலனோம்புகை சேவைகள் தொடர்பாக நிதமும் கேட்கப்படும் கேள்விகள்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வழங்கப்படும் நலனோம்புகைகளும் சேவைகளை புறப்படுவதற்கு முன்னரும் வெளிநாட்டில் உழைக்கும் போதும் நாடு திரும்பிய பின்னரும் அடைந்துகொள்ள முடியும் என்பதை அறிந்துவைத்துக்கொள்ளுங்கள்.

கேள்வியும் பதிலும்.

**1.கே. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் நலனோம்புகை சேவைகளை யாருக்க அண்மித்துக் கொள்ள முடியும்.**

ப. மேற்படி பணியகம் தனது சேவைகளை தேவை உடையவர்களுக்கும் பிரச்சினை உடையவர்களுக்கும் வழங்குகின்றது.

- இலங்கையில் உள்ளவர்களுக்கான நலனோம்புகை – புலம்பெயர் உழைப்பாளிகளின் குடும்ப அங்கத்தவர்கள்.
- இலங்கைக்கு வெளியே உள்ளவர்களுக்கு – புலம்பெயர்ந்துள்ள உழைப்பாளிகளுக்கு
- நாடு திரும்பியவர்களுக்கு

**கே. காப்புறுதித் திட்டம் என்றால் என்ன?**

ப. காயங்கள், இயலாமை, அல்லது மரணம் சம்பவிக்குமான குடும்ப அங்கத்தவர்களுக்கோ அல்லது நலன்பெற உரித்துடையவரென நியமிக்கப்பட்டுள்ளவர்களுக்கோ பண ரீதியிலான நட்ட ஈட்டினை வழங்கும் ஒரு திட்டமாகும். காப்புறுதி செய்யப்படுவது புலம்பெயர் உழைப்பாளிகள் மட்டுமே. அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் காப்புறுதி செய்யப்படமாட்டார்கள். மரணம், காயங்கள் ஏற்படுதல், இயலாமை, நோய்கள், வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுதல், தாய் நாட்டிற்கு திருப்பியனுப்பப்படுதல் ஆகிய விடயங்களின் போது நட்டஈடு வழங்கப்படுகின்றது.

**கே. நான் எப்படி நட்டஈட்டினை கோர முடியும்.**

ப. மரணம் சம்பந்தமாக மரணம் சம்பவித்து ஆகக்கூடியது 3 மாதங்களுக்குள் நட்டஈட்டு கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. சட்ட ரீதியான குடும்ப அங்கத்தவர்கள் மரணித்த நபரின் சான்றுபடுத்தப்பட்ட மரண அறிக்கை மற்றும் மரணச் சான்றிதழ் மற்றும் தேவையானவிடத்து விவாக அத்தாட்சிப் பத்திரம் மற்றும் குழந்தைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் ஆகியவற்றை சமர்ப்பித்து பணியகத்திடம் நட்டஈட்டு கோரலை சமர்ப்பிக்கலாம். (புலம்பெயர் உழைப்பாளியின் சட்டரீதியான நிலையும் இவ்வாறான நட்டஈட்டு கோரிக்கையின் போது முக்கியமானதாகும்.)

**காயங்களுக்கான நட்டஈட்டுக் கோரிக்கை**

நீங்கள் நாடு திரும்புகின்ற போது விமான நிலையத்தில் சுங்கத்தை அடுத்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கருமபீடத்திற்கு செல்லுங்கள். அவர்கள் உங்களை சஹன பியசவிற்கு அழைத்துச் செல்வார்கள். நீங்கள் பணியகத்தின் கருமபீடத்திற்கு அறிவிக்காமல் விமான நிலையத்திலிருந்து நேரடியாக வீட்டிற்கு சென்றுவிட்டால் ஒரு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு காயம் ஏற்பட்டுள்ளதை நிரூபிப்பதற்காக மருத்துவ சான்றிதழ் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். இயலாமை அல்லது காயங்கள் ஏற்பட்டிருந்தால் உங்களின் கோரிக்கைக்கான வேண்டுகோளுடன் மருத்துவ சான்றிதழையும் பணியகத்திற்கு சமர்ப்பியுங்கள். (இது நாட்டிற்கு திரும்பிய பின்னர் 3 மாதங்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்.)

நலனோம்புகை சேவைகளுக்கு உரித்துரையவராக இருப்பதற்கு நீங்கள் உங்களை பதிவுசெய்திருக்க வேண்டும். இந்த பதிவானது தொழில் செய்யும் இரண்டு ஆண்டுகளுக்கு செல்லுபடியானதாகும். உங்களின் தொழில் ஒப்பந்தக் காலம் 3 வருடங்களாக இருப்பின் இரண்டு ஆண்டுகளின் முடிவில் உங்களது பதவினையும் காப்பறுதியையும் புதுப்பித்துக்கொள்ளுதல் வேண்டும்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வழங்கப்படும் நலனோம்புகை மற்றும் சேவைகளின் முழுப் பட்டியலுக்காக இணைப்பு 6ஐ பார்க்கவும்.

**1.கே. உழைப்பாளிகளுக்கான நலனோம்புகை நிதியம் எவ்வாறு (றுறுகு) தாபிக்கப்படுகின்து?**

ப. பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டமொன்றினால் தாப்பிக்கப்பட்டுள்ளது,

**2.கே. புலம்பெயர் உழைப்பாளிகளின் குடும்ப அங்கத்தவர்களுக்காக வழங்கப்படும் நலனோம்புகை சேவைகள் மற்றும் குடும்பத்தின் அபிவிருத்திக்காக வழங்கப்படும் உதவிகள் யாவை?**

ப. மேலதிக தகவல்களுக்காக பின்னிணைப்பு 6 பார்க்க.

- பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் திட்டம் - குழந்தை பரீட்சையில் சித்தியெய்யும் சந்தர்ப்பத்தில் புலம்பெயர் உழைப்பாளி பதிவுசெய்துகொண்டவராக இருத்தல் வேண்டும்.
- 500,000 வரையிலான கடனுக்கான 50 சதவீதமான வட்டி அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் ஊடாக செலுத்தப்படும்.
- சமுர்த்தி அதிகாரசபையின் வீடமைப்புக் கடன் மற்றும் வாழ்வாதாரக் கடன்:- உள்ளுர் வங்கி முறைமைகள் ஊடாக 500,00 வரை மீள அறிவிட்டுக்கொள்ள முடியும்.
- கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்.
- புலம்பெயர் உழைப்பாளிகளின் பிள்ளைகளுடைய திறமைகளை ஊக்குவிக்கும் பொருட்டு தருதிரிய நிகழ்ச்சித்திட்டம்.
- சமூக சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து சேசத – ஓய்வூதியத் திட்டம்:- பணியகத்தின் நிதி இதற்காக பயன்படுத்தப்பட மாட்டாது. ஆயினும், புலம்பெயர் உழைப்பாளிகள் சுயவிருப்பத்தின் பேரில் இத்திட்டத்தில் இணைந்து கொள்ளலாம்.
- பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டவரகள் மற்றும் ரட்டவிருவோ ஒழுங்கமைப்பின் அங்கத்தவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்.

**3.கே. தொழிலில் ஈடுபடுகின்ற புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பணியகத்தினால் வழங்கப்படும் சேவைகள் யாவை?**

ப. பிரச்சினைகளை சந்திக்கும் புலம்பெயர் ஊழியர்களின் பிரச்சினைகளை அந்த நாட்டிலேயே தீர்த்துக்கொள்வதற்கு முயற்சி செய்தல் அல்லது அவர்களை இலங்கைக்கு திரும்பச் செய்தல்.

பாதுகாப்பு இல்லங்களும் அவற்றின் சேவைகளும்

மீளத்திரும்பவதற்கான விமானச் சீட்டுகள்

இந்த அனைத்து பிரச்சினைகளையும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு அல்லது தொழிலாளர் பிரிவு கையாளுவதுடன் நலனோம்புகை சேவைகளின் ஒரு பகுதியாக இணைப்பாக்க சேவையும் இடம்பெறுகின்றது.

**4.கே. நாடு திரும்பியவர்களுக்குள்ள நலனோம்புகை சேவைகள் யாவை?**

ப. இது விமான நிலையத்தில் கிறீன் செனல் என அழைக்கப்படும் இடத்தின் அருகாமையிலுள்ள பணியகத்தின் கருமபீடத்திலேயே ஆரம்பிக்கப்படுகின்றது.

- நாடு திரும்பும் ஒருவர் கர்ப்பமடைந்திருந்தால் அவர் சஹன பியச மற்றும் இரட்சிண்ய சேனையின் (செல்வேசன் ஆமி) உதவியை பெற்றுக்கொள்வதை தெரிவுசெய்துகொள்ளலாம் என்பதுடன் பின்னர் அது சம்பந்தமாக எவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்வது அல்லது பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதை தீர்மானிக்கலாம்..
- குழந்தையுடன் வரும் உழைப்பாளிகளும் சஹன பியசவின் உதவியை நாட முடியும்.
- இயலாமையுடன் திரும்புபவர்கள் மதிப்பீடு செய்யப்பட்ட தேவைக்கேற்ப பணியகத்தின் வாழ்வாதார உதவிகளை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பிருக்கின்றது. ஒரு வர்த்தக திட்டத்தை விருத்திசெய்ய தேவையாயின் அதற்கு உதவுவதற்கு பணியகத்தின் உத்தியோகதர் ஒருவர் ஒத்தாசை வழங்குவார்.
- ஒருங்கிணைவு உதவிகள்
- சுயதொழில கடன்கள்
- உளவள ஆலொசனைகள்

**5.கே. பதிவு செய்துகொள்ளாதவரகளும் நலனோம்புகை சேவைகளை நாட முடியுமா?**

ப. உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம். ஆயினும், அனைத்து நலன்களையும் பெற்றுக்கொள்வதற்கு இயலாது. இது சம்பவத்திற்கேற்ப தீர்மானிக்க்ப்படுகின்றது.

**6.கே. வெளி நாடுகளில் சிவில் மக்கள் குழப்ப நிலை தோன்றும் போது பணியகம் எவ்வாறன உதவிகளை வழங்குகின்றது?**

ப. பணியகம் உங்களை தாய் நாட்டிற்கு அழைத்துவருவதற்கு உதவி வழங்கமுடியும்.

**7.கே. சைபிரஸில் தொழில் செய்யக்கூடிய காலவரையறை உள்ளதா? மற்றைய நாடுகளில் நிலைமை எவ்வாறு இருக்கின்றது?**

ப. ஆம். சைபிரஸ் நாட்டில் ஒருவர் ஆகக்கூடியது 5 வருடங்கள் மாத்திரமே சேவைசெய்ய முடியும்.

பரிந்துரை செய்வதற்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடிய கருவிகள்: பாதுகாப்பான புலம்பெயர்வு பற்றிய துண்டுப் பிரசுரங்கள், சுபகமன் - திரைப்படம்

## பின்னிணைப்பு 1 – ஒரு கடவுச்சீட்டினை பெற்றுக்கொள்ளுதல்

சாதாரண கடவுச்சீட்டு

அனைத்து நாடுகளுக்குமான கடவுச்சீட்டு

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் எவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்?

1. தற்போதைய கடவுச்சீட்டு (விபரங்களுக்கு பின்வரும் பகுதியை பாருங்கள்)
2. விண்ணப்பதாரியின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப்படிவம்.
3. விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற் பிரதியும்.
4. தேவையானவிடத்து திருமண அத்தாட்சிப் பத்திரம்
5. உங்களின் தொழிலை உறுதிப்படுத்துவதற்கான ஒரு கடிதம், தொழில்வாண்மை சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரம்.

ஏற்கனவே உங்களிடம் M அல்லது N தொடர்வரிசையைக் கொண்டதொரு கடவுச்சீட்டு இருக்குமாயின் (அதாவது உங்கள் கடவுச்சீட்டின் இலக்கம் M அல்லது N எழுத்துக்களில் ஆரம்பிக்குமாயின்) அது விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்பத்தை எங்கே பெற்றுக்கொள்ள முடியும்?**

1. குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் தலைமைக் காரியாலயம், கொழும்பு.
2. கண்டி, மாத்தறை மற்றும் வவுனியாவின் பிராந்திய காரியாலயங்கள்
3. உங்கள் பிரதேசத்திலுள்ள பிரதேச செயலம்.
4. வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதுச் சேவை அலுவலகங்கள்
5. விண்ணப்பப் படிவங்களை பின்வரும் இணையத்தள முகவரியின் ஊடாக பதிவிறக்கம் செய்யலாம். http://www.immigration.gov.lk

**நான் விண்ணப்பத்தை எங்கே சமர்ப்பித்தல் வேண்டும்.?**

1. குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் தலைமைக் காரியாலயம், கொழும்பு.
2. கண்டி, மாத்தறை மற்றும் வவுனியாவின் பிராந்திய காரியாலயங்கள்
3. வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதுவராலயங்கள்

**அனைத்து நாடுகளுக்குமான கடவுச்சீட்டை எத்தனை நாட்களில் விநியோகித்தல் வேண்டும்.**

சாதாரண முறைமை - 10 வேலை நாட்கள்

அவசர முறைமை - ஒரே நாளில் பெற்றுக்கொள்ளலாம்.

**அனைத்து நாடுகளுக்குமான கடவுச்சீட்டுக்கான கட்டணம் யாது?**

சாதாரண முறைமை - இலங்கை ரூபா. 2500.00

அவசர முறைமை - இலங்கை ரூபா. 7500.00

காணாமல் போகும் பட்சத்தில் - இலங்கை ரூபா. 10,000 அதனுடன் தண்டப்பணம்.

குறிப்பிட்ட சில நாடுகளுக்கு செல்லுபடியாகும் இலங்கை கடவுச்சீட்டுகள்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கும் வேறு சில தெற்காசிய நாடுகளுக்கும் பயணிக்க விரும்பும் இலங்கையர்கள் இந்த கடவுச்சீட்டிற்கு விண்ணப்பிக்கலாம். அனைத்து நாடுகளுக்குமான கடவுச்சீட்டினை விட இதில் வீசா பக்கங்கள் குறைவாக இருப்பதுடன் இதற்கான செயன்முறைக் கட்டணமும் குறைவானதாகும்.

**மேற்படி கடவுச்சீட்டு செல்லுபடியாகும் நாடுகளின் பட்டியல்**

இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைத்தீவு, ஈரான், ஈராக், லெபனன்:, சிரியா, ஜோர்தான், சவுதி அரேபியா, ஐக்கிய அரவு எமிரேட்ஸ், ஓமான், குவைட், கட்டார், பஹ்ரேன், யேமன்.

**பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள் யாவை?**

- தற்போதைய கடவுச்சீட்டு (விபரங்களுக்கு பின்வரும் பகுதியை பாருங்கள்)
- விண்ணப்பதாரியின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப்படிவம்.
- விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற் பிரதியும்.
- தேவையானவிடத்து திருமண அத்தாட்சிப் பத்திரம்
- உங்களின் தொழிலை உறுதிப்படுத்துவதற்கான ஒரு கடிதம், தொழில்வாண்மை சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரம்.

**வரையறுக்கப்பட்ட நாடுகளுக்கான கடவுச்சீட்டுக்கான கட்டணங்கள் யாவை?**

சாதாரண அடிப்படை - இலங்கை ரூபா. 1000.00

அவசர அடிப்படை - இலங்கை ரூபா. 2500.00

ஏற்கனவே உங்களிடம் M அல்லது N தொடர்வரிசையைக் கொண்டதொரு கடவுச்சீட்டு இருக்குமாயின் (அதாவது உங்கள் கடவுச்சீட்டின் இலக்கம் M அல்லது N எழுத்துக்களில் ஆரம்பிக்குமாயின்) அது விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

## பின்னிணைப்பு 2 புறப்படுவதற்கு முன்னரான பயிற்சி பற்றிய விபரங்கள்.

| பயிற்சிப் பாடநெறி | இலக்கு குழு | வயதெல்லை | காலம் (நாட்கள்) | பணியகததின் பயிற்சிக் கட்டணம். | NVQ கட்டணம் (ரூபாய்) | செலுத்த-வேண்டிய மொத்தக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் பெண்களுக்கான வீட்டுப் பராமரிப்பு பயிற்சி | மனைசார் பணித்துறை பெண் உழைப்பாளிகள். | 21-45 | 21 | 5,000.00 | 2,500.00 | 7,500/= |
| சைபிரஸ் நாட்டிற்கான மனைசார் பணி மற்றும் பராமரிப்பு பயிற்சி (ஆண் மற்றும் பெண் இருபாலாருக்கும்) | ஆங்கிலம் பேசக்கூடிய மனைசார் பணித்துறை பெண்கள் | 21-45 | 30 | 6,500.00 | 2,500.00 | 9,000.00 |
| சிங்கப்பூர்.'.ஹொங்கொங நாட்டிற்கான மனைசார் பணி மற்றும் பராமரிப்பு பயிற்சி (ஆண் மற்றும் பெண் இருபாலாருக்கும்) | ஆங்கிலம் பேசக்கூபய மனைசார் பணித்துறை பெண்கள். | 21-45 | 30 | 6,500.00 | 2,500.00 | 9,000.00 |
| இஸ்ரேல் நாட்டிற்கு செல்கின்ற பணியாளர்களுக்கான சுகாதார பராமரிப்பு பயிற்சி | பராமரிப்பு துறைப் பணிகளுக்காக செல்லுகின்ற ஆண் மற்றும் பெண் ஊழியர்கள் | 21-45 | 25/28 | | 3,500.00 | 3,500.00 |
| இஸ்ரேல் நாட்டிற்கு செல்கின்ற அனுபவம்வாய்ந்த சுகாதார பராமரிப்புத் துறை பணியாளர்கள் | பராமரிப்பு துறை பணிகளுக்கு செல்லுகினற அனுபவம்வாய்ந்த பணியாளர்கள். | 21-45 | 15 | | | 6,000/= |
| புலம்பெயரவுள்ள உழைப்பாளிகளுக்கான எழுத்தறிவு பயிற்சி | தங்களது சொந்த மொழியை எழுத வாசிக்க தெரியாத புலம்பெயரவிருக்கும் உழைப்பாளிகளுக்கு | 21-45 | 18 | | | 2,500/= |
| சைபிரஸ நாட்டிற்கு செல்லவிருக்கின்ற பணியாளரகளுக்கான விசேட ஆங்கில் எழுத்தறிவு பயிற்சி | ஆங்கிலம் எழுத வாசிக்க தெரியாத புலம்பெயரவிருக்கின்ற பணியாளர்களுக்கு குறிப்பு: சிங்கப்பூர் அல்லது இஸ்ரேலுக்கு செல்லவிருக்கின்றவர்களும் விரும்பினால் இந்த பயிற்சியை பெற்றுக்கொள்ளலாம். | 21-45 | 18/180 | | | 3,000/= |
| மனைசார் பராமரிப்புத் துறையைத் தவிர்ந்த ஏனைய வெளிநாட்டு தொழில்களை நாடுபவர்களுக்கான விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | இதுவரை வெளிநாட்டில் வேலைசெய்திராது முதன்முறையாக மத்திய கிழக்கு நாடுகள், மாலைத்தீவு மற்றும் மலேசியா நாடுகளுக்கு செல்லுகின்றவர்கள் | 18-45 | 21 | 5,000.00 | 2,500.00 | 7,500.00 |
| அனுபவமுள்ள மனைசார் பணித்துறைக்கு செல்லுகின்ற பெண் பணியாளர்களுக்கான பயிற்சி | அரேபிய மொழியை பேசுவதற்கு தெரிந்த (மத்திய கிழக்கு நாடுகளுக்கு) மற்றும் கிரேக்க மொழியைப் பேசத்தெரிந்து (சைபிரஸ நாட்டிற்கு) அனுபவம் வாய்ந்த பெண் பணியாளர்கள். | 21-45 | 07/63 | | | 6,000/= |

## பின்னிணைப்பு 3 – பயிற்சி நிலையங்களின் முகவரிகளும் தொடர்பு விபரங்களும்.

**அம்பறை**
28/58 ணு கெமுனுபுர
அம்பாறை
தொலைபேசி: : +94 63 2222188
தொலைநகல் : +94 63 2222188
மின்னஞ்சல் : dct_ampara@slbfe.lk

**அனுராதபுரம்**
29, வான் எல நிவச, அபய பிளேஸ்
அனுராதபுரம்.
தொலைபேசி : +94 55 2222095
தொலைநகல் : +94 55 2222095
மின்னஞ்சல் : provi_apura@slbfe.lk

**பதுளை**
104/3 கெப்பெட்டிபொல வீதி, பதுளை
பதுளை.
தொலைபேசி : +94 55 2222095
தொலைநகல் : +94 55 2222095
மின்னஞ்சல் : provi_badulla@slbfe.lk

**மட்டக்களப்பு**
344/5 சந்ரா மாவத்தை, திருகோணமலை வீதி,
திருகோணமலை.

தொலைபேசி : +94 65 2227547
தொலைநகல் : +94 652227547
மின்னஞ்சல் : dct_batic@slbfe.lk

**கடவத்தை**
62/2/A, எலிகஹவத்த, கண்டி வீதி,
கடவத்தை
தொலைபேசி : +94 11 2922284
தொலைநகல் : +94 11 2922284
மின்னஞ்சல் : dct_kadawatha@slbfe.lk

**கண்டி**
இல. 123. அனகாரிக தர்மபால மாவத்தை
பூவெலிகடை, கண்டி
தொலைபேசி : +94 81 22202590
தொலைநகல் : +94 81 2202590
மின்னஞ்சல் : dct_kandy@slbfe.lk

**குருநாகலை**
208, A, கொழும்பு வீதி, வேஹெர,
குருநாகல்.
தொலைபேசி : +94 37 2232640
தொலைநகல் : +94 37 4692204
மின்னஞ்சல் : dct_ Kgala@slbfe.lk

**மத்துகம**
மத்துகமவத்த, பண்டாரநாயக்க மாவத்தை,
மத்துகம.
தொலைபேசி +94 34 2247188
தொலைநகல் : +94 34 2247188
